

# தொண்டன்

ஆரம்பம் : பெப்ரவரி 1969

மார்ச் - 2001 - 12/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்ச் - 2001

மலர் 33 ❄ இதழ் 02

ஆசிரியர்
J.A.G. இரட்ணகுமார்

இணை ஆசிரியர்
மலர்வேந்தன்

துணை ஆசிரியர்
மெற்றில்டா இராஜேந்திரம்

வெளியீடு
சமூகத் தொடர்பு நிலையம்.
திரு/மட். மறை மாவட்டம்

முகவரி
சமூகத் தொடர்பு நிலையம்.
அ. பெ. எண் ~ 44
மட்டக்களப்பு.

**SOCIAL COMMUNICATIONS CENTRE**
**P. O. BOX - 44**
**BATTICALOA. 30000**
**Tel: 065 - 22723**

விலை - 12/=
ஆண்டுச்சந்தா : 160/=
(தபாற்செலவு உற்பட)

# உள்ளே

| | |
|---|---|
| அன்புடன் உங்களோடு... | - 01 |
| உரையாடலுக்கான.... | - 02 |
| கல்வாரி நோக்கி ஒரு பயணம் | - 04 |
| அழிந்துவிடு | - 06 |
| நான் கடவுளைக் கண்டேன் | - 07 |
| சிலுவையின் பாதை | - 09 |
| இலக்கிய மஞ்சரி | - 11 |
| தேசப்படத்தினிலே.... | - 12 |
| மாணவர் பக்கம் | - 13 |
| கிறிஸ்தவ இலக்கியப்.... | - 15 |
| உலக மயப் போக்கும்..... | - 17 |
| எங்கே நிம்மதி | - 19 |
| கண்ணிழந்த பின்னே | - 20 |
| சிலுவை மரத்தை ஏற்ற.... | - 21 |
| கிறிஸ்தவ அடிப்படை..... | - 23 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புடன் உங்களோடு.....

இயற்கையன்னையின் இணையற்ற பரிசு
காலங்கள்.
அவை இலையுதிராக, வசந்தமாக
இளவேனிலாக. முதுவேனிலாக
அமைகின்றன.
ஒவ்வொன்றிற்கும் தம் இயல்பைக்காட்டும்
தனித்துவமுண்டு.

இறைமக்களை உள்ளடக்கிய
திருச்சபைக்கும் காலங்களுண்டு.
அவை திருவருகை, பொது,
தபசு, பாஸ்காவாக அமைகின்றன.
ஒவ்வொன்றிற்கும் தம் இயல்பைக் காட்டும்
தனித்துவமுண்டு.

நாம் அடியெடுத்து வைத்திருக்கும் காலம்
அதுதான் தவக்காலம்.
உண்ணா நோன்பிருந்து, உடலை ஒறுத்து
ஒரு தபசியாக வாழ்வதைவிட.
உள்ளுர மனமாற்றம் பெற்று,
உத்தம மனிதனாய் உருப்பெற்று,
புதுப்படைப்பாக மாறிட
உன்னை அழைக்கும் காலமே
இத்தவக்காலம்.

இந்த இலக்கையடைய
செபங்களும், தபங்களும்
இன்றியமையாதவைதான்
ஆயினும், மனமாற்றம் பெற்று,
புதிய மனம் கொண்டு நீ வாழ
வேண்டுமென்பதும்,
அதன்விளைவாக அடுத்தவர் வாழ
வேண்டுமென்பதும்
இத்தவக்காலத்தில் இறைவனின் திருவுளம்.

மனமாற்றமடைய ...
மரத்துப்போன இதையங்களும்,
மற்றவர் மகிழ்ச்சியை அழிக்கும் அரக்க
குணங்களும்,
மனித சுதந்திரத்தை மழுங்கடிக்கச் செய்யும்
சித்தாந்தங்களும்,
போதனை என்ற போர்வையில்,
மக்களின் உள்ளக் குமுறல்களுக்கு
அணைபோடும் போலித்தனங்களும்,
அகிம்சை வழி செல்ல நினைப்பவர்களை
ஆயுத பலத்தால் அடக்கும்
அடாவடித்தனங்களும்
மறைய வேண்டும்.

மனமாற்றமடைந்தால் ....
அணுகு முறையில் புதிய திருப்பங்கள் நேரும்.
தீராத பிரச்சினைகளும் தீரும்.
மனப்புண்களும் ஆறும்.
உள்ளத்திலும், இல்லத்திலும்,
நகரிலும், நாட்டிலும்
சாந்தியும், சமாதானமும் தழைக்கும்.

ஆசிரியர்

## இறைவாக்கு



நீங்கள் உங்கள் உடைகளைக் கிழித்துக் கொள்ள வேண்டாம், இதயத்தைக் கிழித்துக் கொண்டு உங்கள் கடவுளாகிய ஆண்டவரிடம் திரும்பிவாருங்கள்.

- யோவேல் 2-13



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உரையாடல்களுக்கான சர்வதேச ஆண்டு



உரையாடல், பேச்சுவார்த்தை என்னும் விடயங்கள் நமது நாட்டிலும் சரி, ஏனைய நாடுகளிலும் சரி இன்று பரவலாகப் பேசப்படுகின்றன.

பேச்சுக்கு அடிப்படையாக இருப்பது மொழி. மொழியினுடைய தோற்றப்பாட்டை ஆராய்ந்த மானுடவியலாளர்கள் மொழி என்பதே உரையாடலின் அவசியத்தையொட்டி உருவானது தான் என்பர்.

மொழிதோன்றாக் காலத்துக்கு முன் வாழ்ந்த மனிதன் தன்னைப்போன்ற சக மனி தரிடம் தன்னை வெளிப்படுத்த அன்றேல் ஒன்றைத் தெரிவிக்க ஒலிகளை, அடையாளங்களைப் பயன்படுத்தியதாகத் தெரிய வருகிறது. காலப்போக்கில் அறிவு வளர வளர திருந்திய ஒலிகள் மொழிகளாக வளர்ச்சி கண்டதாக மொழிகளின் தோற்றம் பற்றி ஆராய்ந்த அறிஞர்கள் தெரிவிக்கின்றனர். இவ் வளர்ச்சி ஒரு சில நாட்களில், ஒரு சில ஆண்டுகளில் நடை பெற்ற நிகழ்வு அல்ல. பலநூறு ஆண்டு காலப் பயன்பாட்டின் வளர்ச்சியாகும். ஆனாலும் ஒலி வடிவில் உணர்வுகளை, கருத்துக்களை வெளிப்படுத்தும் பண்பு இன்றும் கூடவழக்கில் உள்ளதைக் காணமுடிகின்றது. (எ+டு) பயத்தை வெளிப்படுத்த ஆ!.... வியப்பை வெளிப்படுத்த ஓ!.... இவ்வாறு ஒலிகளால் வெளிப்படுத்தும் பண்டைய முறையின் எச்சங்களாக இவை விளங்குகின்றன. எனவே மொழி என்பது அதன் இயல்பிலேயே தொடர்பு கொள்வதை, உரையாடுவதை அடிப்படையாகக் கொண்டது.

### கடவுளும் உரையாடினார்

உரையாடல் என்பது மனிதர்களுக்கிடையில் மட்டும் நிகழ்வதன்று. கடவுளும் மனிதரோடு பேசினார், பேசுகிறார் என்று விவிலியம் கூறுகிறது. தொடக்க நூல் காட்டும் மனிதப் படைப்பு முதல், இன்றுவரை இவ் வுரையாடல் நிகழ்கிறது. "கடவுள் அவர்களுக்கு ஆசி வழங்கி பலுகிப் பெருகி மண்ணுலகை நிரப்புங்கள்; அதை உங்கள் ஆற்றலுக்கு உட்படுத்துங்கள்; கடல் மீன்கள், வானத்துப் பறவைகள், நிலத்தில் ஊர்ந்து உயிர் வாழ்வன அனைத்தையும் ஆளுங்கள்" என்றார். (தொ.நூல்1:28) மனிதனை ஆசீர்வதித்த கடவுள் அவன் எப்படி வாழவேண்டும் என்றும் கூறினார். அவரது வார்த்தை மீறப்பட்டபோது திருந்தி வாழுமாறு அழைத்தார். இவ்வாறு கடவுள் தாமாகவும், தந்தையர்கள், இறைவாக்கினர்கள், தூதர்கள் வழியாகவும் பேசினார் என்று வேதம் கூறுகிறது. விவிலியம் கடவுளை மோனத்தில் மூழ்கியிருப்பவராக அல்ல உரையாடுபவராக, உறவு கொள்பவராகவே காட்டுகின்றது. மானுடம் குற்றம் இழைத்தபோதும் தண்டனை தரும் தேவனாக அழித்துவிடும் தேவனாக அல்லாமல் குற்றம் இழைத்தவர்களோடு உரையாடி வாழ்வுபெறும் வாய்ப்புகளை வழங்குபவராக, மானுடத்தைக் காத்து வளர்ப்ப வராகவே விளங்குகிறார். இன்னொரு வகையில் சொன்னால் மனிதன் வாழவும், உறவுகள் வளரவும், உயிர் வாழ்க்கை காப்பாற்றப்படவும் உரையாடல்கள் அவசியம் என்பதையே விவிலியக் கூற்றுக்கள் புலப்படுத்துகின்றன.

### பெருகும் முரண்பாடுகள்

இன்றைய உலகில் மதம், இனம், கலாசாரம், மொழி என்று பல்வேறு வகையிலும் பிரிந்து நிற்கும் மனிதக் குழுமங்களிடையே உரையாடல் அவசியம் என்பதை இரண்டாம் வத்திக்கான் சங்கம் வலியுறுத்துகின்றது. 'இன்றைய உலகில் திருச்சபை' என்னும் கொள்கைத் திரட்டின் முன்னுரையில் 3ம் வசனத்தில் 'உரையாடுவதை விடச்சிறந்த வழிகாண முடியாது' என்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிசுப் போட்டி! பிள்ளைகளுக்கு மட்டும்!

விவிலியம் கற்போம் - 08 முடிவுத் திகதி: 30-04-2001

# யோசேப்பும் சகோதரர்களும்

(தொடக்க நூல் 37:1-36)

யாக்கோபு கானான் நாட்டில் தம் தந்தை தங்கியிருந்த நிலப் பகுதிகளில் வாழ்ந்தபோது, அவருடைய முதிர்ந்த வயதில் யோசேப்பு பிறந்தார். இவர் பதினேழு வயது இளைஞனாக இருந்தபோது தமது ஏனைய சகோதரர்களுடன் மந்தை மேய்த்து வந்தார். யாக்கோபு இவரை மற்றெல்லாப் புதல்வர்களையும்விட அதிகமாக நேசித்ததினால் அவருக்கு அழகான வேலைப்பாடுகள் நிறைந்த அங்கிபொன்றைத் தயாரித்துக் கொடுத்தார். யோசேப்பு, மந்தைகள் மேய்க்கும்போது தமது சகோதரர்கள் செய்யும் கெட்ட வேலைகளைத் தந்தைக்கு அறிவித்து வந்தார். இவற்றையெல்லாம் அவதானித்துவந்த யோசேப்பின் சகோதரர்கள் அவர்மேல் வெறுப்பும் பொறாமையும் கொண்டனர். ஒருமுறை யோசேப்பு தான்கண்ட கனவு ஒன்றை தமது சகோதரர்களுக்குத் தெரியப்படுத்தியபோது எரிச்சலடைந்தார்கள். எனினும் தமது தந்தைக்குப் பயந்து அவரை ஒன்றும் செய்யவில்லை. ஒருமுறை யோசேப்பின் சகோதரர்கள் மந்தைகளை மேய்ப்பதற்காக செக்கேம் என்னும் ஊருக்குச் சென்றார்கள். நீண்ட நாட்களுக்குப்பின் அவர்களைக் காணவந்த யோசேப்பை கொன்றுவிட ஆலோசனை செய்தார்கள். எனினும், ரூபன் என்னும் சகோதரன் மனமிரங்கி, அவரைக் காப்பாற்ற எண்ணி, அவரைக் கொல்லாமல் ஆழ்குழியில் தள்ளிவிட யோசனை சொன்னான். அப்படியே யோசேப்பைத் தண்ணீர் இல்லாத ஆழ்குழியில் தள்ளிவிட்டார்கள். சற்றுநேரம் சென்ற பிறகு, எகிப்து செல்லும் வியாபாரிகளை கண்ட யூதா என்ற சகோதரன், யோசேப்பை காப்பாற்றும் பொருட்டு அவனை அந்த வியாபாரிகளுக்கு விற்றுவிடும்படி யோசனை சொன்னான். அப்படியே அவர்களும் யோசேப்பை வெளியே எடுத்து, தந்தை கொடுத்த அங்கியைக் கழற்றி எடுத்துக்கொண்டு வியாபாரிகளுக்கு விற்றுவிட்டார்கள். பிறகு தந்தையிடம் சென்று அங்கியைக் காட்டி, "யோசேப்பை கொடிய விலங்கு அடித்துக் கொன்றுவிட்டது" என்று பொய்சொன்னார்கள். அதை நம்பிய யாக்கோபு கதறியழுது பலநாள் துக்கம் அனுஷ்டித்தார்.

**கேள்விகள்:**

1. யாக்கோபு வாழ்ந்த நாடு எது?.........................
2. மந்தை மேய்க்கச் சென்றபோது யோசேப்பின் வயது?..................
3. யோசேப்பின் சகோதரர்கள் மந்தைமேய்க்கச் சென்ற இடம்...........
4. அவர்மீது மனமிரங்கிய முதல் சகோதரன் பெயர்?......................
5. வியாபாரிகள் பயணம் செய்த நாடு?....................

குறிப்பு: வினாப்படிவத்திலேயே விடைகள் எழுதி அனுப்பப்பட வேண்டும். வேறுவகையில் எழுதி அனுப்பப்படும் விடைகள் போட்டிக்கு சேர்த்துக்கொள்ளப்படமாட்டாது. போட்டி முடிவுகள் 'தொண்டன்' இதழில் வெளியிடப்படும். - ஆ-ர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிசுப்போட்டி! பிள்ளைகளுக்கு மட்டும்!

அறிவை வளர்ப்போம் - 08 முடிவுத் திகதி: 30-04-2001

1. இஸ்லாமியரின் புனித ஸ்தலம் என்று அழைக்கப்படும் இடம் எது?

...............................

2. சுவாமி விபுலாநந்தர் பிறந்த இடம் எது?

...............................

3. இரத்தத்தில் எந்தச் சேர்வையின் அளவு அதிகரிப்பதால் மாரடைப்பு நோய் ஏற்படுகிறது?

...............................

4. அண்மையில் பதவியேற்ற ஜோர்ஜ் டபிள்யு புஸ் அமெரிக்காவின் எத்தனையாவது ஜனாதிபதி?

...............................

5. மழைவீழ்ச்சியை அளக்கப் பயன்படும் அலகு எது?

...............................

6. டிசம்பர் மாதம் வெளிவந்த தொண்டனில் 'அவர்கள் விருப்பம்' என்ற சிறுகதையை எழுதியவர் யார்?

...............................

பெயர்...........................................................

முகவரி.........................................................

...........................................................

...........................................................

அனுப்பவேண்டிய முகவரி:

விவிலியம் கற்போம் - 08 / அறிவை வளர்ப்போம் - 08
தொண்டன்,
அ. பெ. எண் - 44,
மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

‘ஏனெனில் மனிதன் காப்பாற்றப்பட வேண்டும், மனித சமுதாயம் புதிப்பிக்கப்பட வேண்டும்’ என்றும் கூறுகிறது. உலகின் நடப்புகளையும் முரண்பாடு களையும், அழிவுகளையும் அவதானிக்கும் போது இக் கூற்று எவ்வளவு பொருள் பொதிந்தது என்பது புலனாகும்

மனிதர்கள் உடலால், உயிர் வாழ்வால் ஒன்றேயானாலும், மொழியால், இனத்தால், மதத்தால், நாட்டால், கலாசாரம், பண்பாடுகளால் பல கூறுகளாகப்பிளவுண்டுகிடக்கின்றனர். இதன் காரணமாகப் புரிந்துகொள்ளாமையும் முரண்பாடு களும் நிலவுகின்றன. இந்நிலை மையை அரசியல் ரீதியாகவும் சமூக, பொருளாதார ரீதியாகவும் ஆதிக்க சக்திகள் ஊதிப் பெருப்பித்து இலாபம் அடைய முனைவதோடு ஆயுதப் பரம்பலுக்கும், வன்முறை யுத்தம் போன்ற அழிவுகளுக்கும் உலகை நடத்திச் செல்கின்றன. இந்நிலையில் மனிதகுலத்துக்கு ஏற்படும் பேரழிவிலிருந்து விடு பட வேண்டுமாயின் அதற்கு ஒரே வழி உரையாடல் தான் என்பது மானுட மேம்பாட்டில் அக்கறை கொண்ட அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட உண்மையாகும். இதனால்தான் ஐ.நா.நிறுவனம் இவ்வாண்டை (2001) ‘நாகரீகங்களுக்கிடையே பேச்சுவார்த்தைக்கான சர்வதேச ஆண்டு’ ஆக பிரகடனப் படுத்தியுள்ளது. ‘ஒப்பரவு, இணக்க வாழ்வு, மற்றும் கலாசார மதப் பாரம்பரியங் களிடையே ஒத்துழைப்புத் தேவை எனில் பேச்சு வார்த்தை என்பது அத்தியாவசியம் என்று அது குறிப்பிட்டுள்ளது. இது பற்றிக் கருத்துத் தெரிவித்த ‘கத்தோலிக்க திருச்சபையின் தலைவர் திருத் தந்தை 2ம் அருளப்பர் சின்னப்பர் ஒவ்வொரு வரும் தங்கள் கலாசாரத்தை உயர்வென மதிக் கும் அதேவேளை ஏனைய கலாசாரங்களையும் மதிக்கும் மனப்பான்மையை வளர்த்துக் கொள்ள வேண்டுமென அழைப்பு விடுத்துள்ளார்.’ மேலும் அவர் ‘மக்களிடையேயான தப்பெண்ணங்களும் கலாசார முரண்பாடுகளும் இவ்வுலகில் பல மோதல்களுக்குக் காரணமாகியுள்ளன’ என்றும் குறிப்பிடுள்ளார்.

இன்று உலகில் குறிப்பாக தென்னாசிய நாடுகளிலும் கிழக்கைரோப்பிய நாடுகளிலும் மற்றும் ஆபிரிக்க நாடுகளிலும் பெருகிவரும் இன-மத மோதல்களும் ஆயுதப் பெருக்கமும் அச்சுறுத் தல்களும் மானிட வாழ்வின் இருப்புக்குப் பெரும் சவாலாய் விளங்குகின்றன. இந் நிலையில் மனித மாண்பை, மனித வாழ்வைக் காப்பாற்ற வேண்டு மாயின் திறந்த மனதோடும், பொறுப் புணர்வோடும், மனித நேயுத்தோடும் மாறுபட்ட இனங்கள், கலாசாரங்கள், தலைமைத்துவங்கள் தமக் கிடையே உரையாடல்களில் ஈடுபடுவது அவசிய மாகும். ‘எத்தகைய ஒரு முரண்பாட்டையும் உரையாடல்கள் மூலம் தீர்க்க முடியும்; இணக்கப் பாட்டுக்கு வரமுடியும்’ என்ற உறுதியான நிலைப் பாடு இங்கே மிகவும் முக்கியமானது. ஆகவே ஐ.நா. அவையால் உரையாடல்களுக்கான சர்வ தேச ஆணடாகப் பிரகடனப் படுத்தப்படடுள்ள இவ்வாண்டு இவ்வுலகில் மானுடக் குழுமங் களுக்கிடையே புரிந் துணர்வையும், ஒற்றுமை யையும் நல்லுற வையும், பரஸ்பரம் கௌரவத் தையும் ஏற்படுத்தும் அர்த்தமுள்ள ஆண்டாக அமைய வேண்டும் என்பதே அனைவரதும் அவாவாகும்.

– மலர்வேந்தன்

“றொக்கட்” என்பது புதிய தொரு கண்டு பிடிப்பு அல்ல கி.பி. 1232ல் சீனர்கள் மங்கோலியருக் கெதிரான போரில் இவற்றிப் பயன் படுத்தினர் பிரித்தானிய ஆக்கிரமிப்புப்படை 18ம் நூற்றாண்டில் சிறிரங்கப் பட்டணத்தைக் கைப்பற்றிச் சூறையாட முற்பட்ட போது திப்பு சுல்தானின் படையினர் றொக்கற்றுக்களைப் பயன் படுத்தியமை பிரித்தானியரைக் கலக்கியது. எனினும் இந்த றொக்கட்டுக்கள் தொழில் நுணுக்கத் திறனற்றவை. அதன் பின் 2ம் உலக யுத்தத்தின் போது கிட்லர் றொக்கற் குண்டு களைத் தயரிக்கும் வரை 100 ஆண்டுகளாக யுத்த களங்களில் றொக்கற் பாவனை இடம் பெற வில்லை. அழிவு நோக்கங்களுக்கன்றி ஆக்க பூர்வ நோக்கில் றொக்கற்றுக்களைப் பற்றி ஆராய்ந்தவர்களில் ரஷியரான கொன்ஸ்ரான்ரின் சியேஸ் கோவஸ்கி (1857 – 1935) முதலிடம் பெறுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வாரி நோக்கி ஒரு பயணம்

அஞ்சலின் F. சுப்பிரமணியம்

**கொல்கொதா!**

அது ஒரு மேட்டு நிலப்பகுதி!

பயங்கர வேதனைகளை வெளியுலகிற்கு எடுத்துக் காட்டிய 'சிலுவை மரணம்' நிகழக் காரணமாய் இருந்த பரிசுத்த இடம்.

சிலுவை மரணத்தின் மூலம் கிறீஸ்து யேசு, தம்மை நமக்கு வெளிப்படுத்தக்களமாய் அமைந்த பொருத்தமான இடம்.

கொலை பாதகர்களுக்கு மத்தியில் கொடுரமான தண்டனையோடு, நிறைவேற்றப்பட்ட 'அந்த' சிலுவை மரணக் காட்சியை, 'இந்த' தவக்கால நேரத்தில் சிந்தனைக்குட்படுத்தி நினைவுக்குக் கொண்டு வருவது பொருத்தமானதாகும்.

இதோ!



கிறீஸ்து யேசு, சுற்றிவர நிற்கும் சேவகர்களின் நீண்ட சவுக்கு வாரினால், மாறி மாறி அடிக்கப்படுகிறார்.

அக்கால வழக்கப்படி, சிலுவை மரணத்திற்கு ஆளானவர்களுக்குகிடைக்கும் ஆரம்ப தண்டனை சவுக்கடியாகும்.

ஆடைகள் அகற்றப்பட்ட நிலையில், முதுகு தெரியும்படியாகக் குனியவைத்து, இரு கைகளும் கட்டப்பட்ட நிலையில் சவுக்கடி நடைபெறுகிறது. சேவகர்களின் கைகளில் இருக்கும் அந்தச்சவுக்குவார், ஈயக்குண்டுகள், எலும்புத் துண்டுகள் கட்டப்பட்ட ஒன்பது நுனிகளைக் கொண்டிருக்கும்,

ஒவ்வொரு அடியின் வீச்சிற்கும் ஒன்பது காயங்கள். அக்கால வழக்கப்படி நாற்பது அடிகளுக்கு மேல் தொடர்ந்து அடிக்க முடியாது. எனவே, முப்பத்தொன்பது அடிகளோடு நிறுத்தி, சற்று ஓய்வு, பின்னர் பரிகாசம், ஏளனம், இவற்றுக்குப் பின் மீண்டும் முதலிலிருந்து சவுக்கு அடி தொடங்குகிறது.

இவ்வாறு அடி தொடரும்போதே, மயங்கி விழுந்து உயிரை விடுபவர்களும் உண்டு.

ஆனால், கிறிஸ்து யேசுவோ, பரிகாசம் பண்ணப்படுவதற்காக, சேவகர்களின் கைகளில் ஒப்படைக்கப்படுகிறார்.

தலையில் முட்களினாலான வட்டச் சுருள் முடிபோல் வைத்து அழுத்தி வேடிக்கை பார்க்கிறார்கள். இதுவரை, முதுகு, உடம்பு என்பவற்றில் புறப்பட்ட இரத்தம், இப்போது தலையிலிருந்தும் கிளம்புகிறது.

இத்தனைக்கு மத்தியில், அவருடைய கையில் வெறும் கோல் ஒன்று கொடுக்கப்படுகிறது அவரை இராஜாவாகப் பாவனை பண்ணி "யூதருடைய இராஜாவே வாழ்க" என்று உரத்த சத்தமாய்க்கத்தி, கன்னத்தில் துப்பி, கையில் இருந்த கோலைப்பிடுங்கி, அதே கோலால் அவரை அடித்துத் துன்புறுத்துகிறார்கள்.

நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்த அகோரக்காட்சியை, இது நடைபெறுவதற்கு 740 வருடத்திற்கு முன்பே வாழ்ந்த 'இசையாஸ்' தீர்க்கதரிசி இப்படி எழுதி வைத்திருக்கிறார்

இது, நடைபெற வேண்டிய ஒரு நிகழ்வு. மனுக்குலம் மீட்படைய தேவனின் திருசித்தம். இசையாஸ் தீர்க்கதரிசி, மிகத்தெளிவாக, இந்த காட்சியைத் துலாம்பரமாகப் படம் பிடித்துக் காட்டியுள்ளார். (இசையாஸ் 53 3-6)

'அவரைப் பார்த்தோம் அவரிடமோ அழகின் அமைப்பு இல்லை.

கவர்ச்சியான தோற்றம் இல்லை. மனிதரால் புறக்கணிக்கப்பட்டார், இகழப்பட்டார் அவர். துன்புறும் மனிதராய், துயரத்தில் வாழ்ந்தவராய் இருந்தார். கண்டோர் கண்மறைத்து அருவருக்கும் ஒரு மனிதர் போல அவர் இகழப்பட்டார். நாம் அவரை மதிக்கவில்லை'

இதோ,

கசையடிகள், பரிகாசங்கள் முடிவடைந்து, சிலுவை தோளில் சுமத்தப்பட்டு, கல்வாரி மலையை நோக்கி நடாத்தப்படுகிறார் கிறீஸ்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குற்றவாளியை மற்றவர்கள் இனங் கண்டு கொள்வதற்காக. அவர் செய்த குற்றத்தின் விபரம் எழுதப்பட்ட பலகையை ஒருவன் முன்னால் எடுத்துக் கொண்டு சன சந்தடி நிறைந்த தெருக்களினூடாக குற்ற வாளியைக் கொண்டு செல்வது அக்கால வழக்கம்.

யேசுவும் அவ்வாறே கொண்டு செல்லப்படுகிறார்.

வாதைகள் தந்த உபாதைகளால், தட்டுத் தடுமாறிச் செல்லும் அவருக்கு 'சீரோன்' ஊரைச் சேர்ந்த மனிதன் ஒருவன் சிலுவையைச் சுமப்பதில் துணையாக நிற்கிறான்.

சிலுவைத் தண்டனையின் தாக்கத்தை மறக்கடிக்க மது கொடுக்கப்படுவது அக்கால வழக்கம். ஆனால் நமது ஆண்டவர், பாடுகளையும், துன்பங்களையும் மயங்கிய நிலையில் ஏற்றுக் கொள்ள விரும்பாதவராக சுயநினைவுடன் மாமிசத்தின் சகல வேதனைகளையும் சிலுவையில் ஏற்க விரும்பினார்.

பாடுகளின் உச்சக்கட்டம்.
மூன்று ஆணிகளின் சிலுவையில்
இதோ கிறிஸ்து யேசு தொங்குகிறார்.
உலகத்தின் நாயகன் உயரத்தில்
தொங்குகிறார்.

இக்கட்டான வேதனைகள் பாடுகள் நிறைந்த இந்த வேளையிலும் கூட அவருடைய சிந்தனை, எண்ணம் என்ன?

தன்னைத் தண்டித்து, மகிழ்ச்சிக் கடலில் மிதக்கும் அவர்களைப் பார்க்கிறார். கருவியான அவர்களில் கழிவிரக்கம் கொள் கிறார்.

"பிதாவே இவர்களை மன்னியும் தாங்கள் செய்வது இன்னதென்று அறியாமலே செய்கிறார்கள்"

இதனைவிடக் கருணை இந்த உலகத்தில் உண்டோ!.
'இசையாஸ்' தீர்க்கதரிசி இதனைப்பற்றி மேலும் சொல்கையில் .............

> *அழகு என்பது ஒழுங்கு. அழகு உள்ள இடத்தில் ஒழுங்கு, உண்மை, நன்மை, செம்மை உண்டு. இலக்கியங்கள் அழகியற் கலைகள் என்ற வகையில் அவற்றைக்கற்பதால் மனித வாழ்வு சீரும் செம்மையும் அழகும் இன்பமும் அடையப் பெறுகிறது.*

'மெய்யாகவே, அவர் நம் பிணிகளை
ஏற்றுக்கொண்டார்.
நம்முடைய நோய்களைச் சுமந்து
கொண்டார்.

ஆனால் அவர் தண்டனைக்குள்ளா
னார். கடவுளால் ஒதுக்கப்பட்டவர்
எனவும், வாதிக்கப்பட்டவர் எனவும்
நாம் எண்ணினோம் ஆனால் அவர்
நம் பாவங்களுக்காகவே நொறுக்கப்
பட்டார்.
நம் அக்கிரமங்களுக்காகவே
அக்கிரமங்களாலேயே அவர் காயப்
பட்டார்.
நம்மை நலமாக்கும் தண்டனை அவர்
மேல் விழுந்தது.
அவருடைய காயங்களால் நாம்
குணமடைந்தோம்
ஆடுகளைப் போல் நாம் வழி தவறி
அலைந்த வேளை.........
கிறிஸ்து யேசு நமக்காக சிலுவையைச்
சுமக்கிறார்.
இத்தனையும் நடைபெற்ற பிறகு நமது
கடமை என்ன?
அவர்,

எங்களுக்காக சகல வேதனையும் அடைந்தார் என்ற நற்செய்தி மூலம் நாம் அவரது பாதங்களைப் பின் தொடர்வதே நாம் செய்யக்கூடிய கட்டாயக் கடமையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இழந்துவிடு

உன்னை மட்டும் இழந்து விடு.......


அதோ
தூரத்தில் தன்னை
இழந்தவன்
கழுமரத்தில்..............

அவரை
மட்டும் அறைந்து விட்டு
வேடிக்கை
பார்க்கிறது-இந்த
சமூகம்

அறைவதற்கு முன்
அவர்களை - அவர்
சுமந்தார்
அவரை
அவர்கள்
சுமக்கவேயில்லை.

ஆசைகளை
ஒறுத்தலென
உண்டியலிட்டு - அல்லேலூயா
பாடுவார்கள் .

வழமைபோல்
பிச்சைக்காரன்
வாசலில் நிற்கிறான்
அவர்களை விட்டு
வெகுதூரத்தில்.........



ஆலயத்தில் - கால்கள்
மடங்கி, நிமிர
உள்ளங்கள் - பரிமாணம்
அடையாத நிர்வாணமாய்.........

காயப்படாத
ஆணிகளில் தான்
இன்னும் - அவர்கள்
அறையப்பட ஆசைப்படுகிறார்கள்.

கழுமரமும்,
கபாலமலையும், அவர்கள்
கனவில் கூட
கற்பனைகளாவதில்லை.

வாழ்க்கையில்
அவரோடு -அவர்கள்
உயிரியல் வசந்தமாய்
வாழ்ந்ததில்லை.

வருடா வருடம்
பரிசுத்த நாட்கள்
பருவ காலங்களாய்
கடந்து போகும்..........

மூன்றாணிகள் தேவையில்லை
முள்முடி தேவையில்லை -முடிந்தால்
உன்னை மட்டும்
இழந்து விடு -அவரைப்போல்
உயிர்த்துக்கொள்ள.

மூதூர் ச. சதீஷ்வரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் கடவுளைக் கண்டேன்...

சிறு கதை

H.R. வர்கீஸ்

வேஜி...! வேஜி...!! அவசரமாக நடந்து கொண்டிருந்த நான் பின்னாலிருந்து வந்த அழைப்புக் குரல்கேட்டு நின்று திரும்பினேன்.

அடடே கண்ணேக்கா! எனக்குள் ஒரு சந்தோஷம் "கன நாளைக்குப் பிறகு காண்றன் எப்படி சுகமா இருக்கிறீங்களாக்கா...." "ம்... நான் கதச்சதா லதான் கதைக் கிறீர் இல்லாட்டி...." "நான் உங்களக் காணல்ல கண்ணேக்கா..." "எப்படிக் காண்கிறது தலயக் கவிண்டு கொண்டு போனா ல்... அதில்ல வேஜி இதென்ன உம்மட கோலம்...? உண்மையா நான் உம்மள மட்டுக் கட்டல வேஜி... குனிஞ்சதல நிமிராமல் நடக்கிறதெண்டால் இந்த ஊருக்குள்ள நீர்தான்.... சத்தியமா அந்த ஒரு மதிப்பிலதான் கூப்பிட்டநான் மற்றப்படி நரன் மதிக் கவேயில்லை நீரெண்டு... உண்மையா உமக்கு என்ன நடந்தது....? ஏன் இப்படி கண்ணெல்லாம் வெளியில் வந்தாப் போல.... சொக்கெல்லாம் தாண்டு காஞ்சி... கறுத்து மெலிஞ்சி... அசல் பத்துப் பிள்ளைகளப் பெற்ற மனுசிபோல. அட அதுகள் கூட என்ன வடிவா இருக்குதுகள்.....

க்ண்ணேக்கா என்னை வர்ணிக்க, வர்ணிக்க எனக்குச் சிரிப்பு வந்தது. "இந்தச் சிரிப்பு மட்டும் மாறல்ல... நான் என்னவோ கேட்டுக்கொண்டிருக்கிறன் உமக்குச் சிரிப்பென்ன?



"பின்ன என்ன கண்ணேக்கா மனுசர் எப்பவும் ஒரே மாதிரி இருக்கேலுமே...? உதாரணத்துக்கு உங்களையே பாருங்களேன் ஒல்லியா இருந்த நீங்க இப்ப ஊது ஊதெண்டு ஊதி...." நான் பேச முடியாமல் சிரித்தேன்

எடுத்ததுக்கெல்லாம் இந்தக் கண்டறியாத சிரிப்புத்தான். முதுகில் செல்லமாய் மெல்லத் தட்டியப்படித் தானும் சிரித்த போது, "எத்தன நாளைக்குப் பிறகு உங்களக் காண்றன் சிரிக்காமல் அழவா சொல்றீங்க.....?"

"பகடியில்ல வேஜி... எனக்கெண்டால் உம்மப்பாக்க அழுக வரப்பாக்குது... என்ன வடிவா இருந்த நீர் கண்பட்டாப்போல... ஏதும் சுகயீனமாக இருந்த நீரே வேஜி...?"

உங்களப் போலத்தான் எல்லாரும் கேட்கிறாங்கள் கண்ணேக்கா.... கடவுளே எண்டு எனக்கொரு வருத்தமும் இல்லை... ஆனா திடீர் திடீரெண்டு நம்மட ஊருக்குள்ள நடக்கிற பிரச்சனை களால ஒரே பயந்து பயந்தெண்டு நினைக்கிறன் இந்தக் கோலம்.. நாங்க இருக்கிற இடம் பொல்லாத இடம் தானே.."

"மெய்தான் மனுசர் மான் சாதி இல்லாத அந்தக் காட்டுக் கதான் இன்னும் இருக்கிறீங்களோ...?" "வேற...? எங்களப் போல உழைப்புப்பிளைப்பில்லாத ஆக்கள் பயந்து பயந்தெண்டாலும் அதுக்குள்ளதான் இருக்க வேணும்... கடவுள் கருணையால இன்னும் எங்கட உயிர்களுக்கு ஒரு ஆபத்துமில்லை.. ஏதோ நம்மட வீடெண்ட வகையில் ஒரு நிம்மதியும்தான்..."

என்னப்பா உம்மட விசர்க்கத... சும்மா ஒண்டுக்கும் ஏலாத சனங்களெல்லாம்டவுண் பக்கம் வந்து சனங்களோட சனங்களா வாழுதுகள் உங்களாலமட்டும் ஏலாமல்ப் போனதோ...? கடள் துணை எண்டு சொல்லிக் கொண்டிருந்தால் ஒரு நாளைக்கு அந்தக் கடவுளும் கண்ண மூடப் போறார்... நீரே சொல்றீர் பயந்து பயந்து தான் இந்தக்கோலமெண்டு பிறகேன் இன்னும் அதுக்குள்ளேயேகிடக்கிறீர்..? பேசாமல் என்னோட வந்திருமன்...."

'கண்ணேக்கா! நீங்க இப்படிச் சொல்றதக் கேட்க எனக்கு எவ்வளவு சந்தோஷமாயிருக்கு.. ஆனா உங்கட இந்த அன்பு நீடிக்க வேண்டு மெண்டால் உங்கட வீட்ட வரக்கூடாது....'

'ஒண்டு சொல்லவோ...? உம்மட இந்தக் குணத்தாலதான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் நீர் இப்படியே இருக்கிறீர்....' 'சரிதான் இப்பவே உங்களுக்கு இவ்வளவு கோபம் வருகுது வீட்டுக்கே வந்திற்றால்..? கோபிக்காதீங்க கண்ணேக்கா.... உங்களத்துக்கப்படுத்த இப்படிச் சொல்லல்ல... நேசம் காட்டி மோசம் செய்த நிறையப் பேர அனுபவத்தில் கண்டு கலங்கிப் போனது இந்த மனம்! நாங்களும் சரியாயிருந்தால் மற்றவங்களப் பின்செல்ல வேண்டிய அவசியமுமில்ல அது போகட்டும் முடிஞ்ச கத... இப்ப எனக்கிருக்கும் ஒரே சிநேகிதம் நீங்க! எந்தவகையிலாவது நீங்களும் என்னைப் பகைச்சால் அதத் தாங்கும் சக்தி எனக்கில்ல...'

'சரி உம்மட விருப்பம். ஆனா இப்ப சும்மா ஒருக்கா வீட்டவந்திற்றுப் போம்...' 'கட்டாயம் வாறன் இன்னொரு நாளைக்கு! இப்ப கோயிலுக்குப் போறன் கண்ணேக்கா.... இல்லையெண்டால் கோயிலுக்குப் போயிற்று வரக்குள்ள வாறனே'

'இண்டைக்கென்ன வியாழக்கிழமைதானே பூசையும் இல்லை' 'பூச இல்லாட்டி என்ன மன்றாடேலாதோ..? 'உண்மையா வேஜி! உம்ம நினைக்க எனக்குக் கவலையா இருக்கு..' 'ஏனக்கா..?' 'கடவுள் கடவுளெண்டு நீதான் சாகிறீர் ஆனா கடவுளுக்கு உம்மில கொஞ்சம் கூட கருணையில்ல......'

'ஏன்? நான் உயிரோட இருக்கிறது கடவுள் கருணையா தெரியல்லியா உங்களுக்கு...? எவ்வளவு பிரச்சனைகள் வந்திருக்கு நாங்கள் செத்த மெண்டு நினைச்ச கட்டத்திலயெல்லாம் பிழச்சிருக்கறம் கண்ணேக்கா...'

ஒமோம்! எவனாவது வந்து வெட்டிப் போட்டுப் போனால் தெரியும் ஒரு நாளைக்கு' 'இண்டைக்கே... என்ர குடும்பமே அழிஞ்சாலும் அதையும் கடவுள் செய்த நன்மையாகவே நினச்சுக் கொண்டு சாவன்! போட்டியும், பொறாமையும் வஞ்சகமும் சூதும் நிரம்பி வழியும் இந்த நரகத்தில் வாழ விடாமல் சாகடிக்கிறது நன்மைதானே..?'

இன்னொரு உண்மை கண்ணேக்கா! எல்லாருமே உழைக்கும் ஒரு குடும்பத்தில் கூட எத்தனை பிரச்சனைகள் பற்றாக்குறைகளிருக்கு. ஆனா உங்களுக்குத் தெரியும் எங்கட குடும்பத்தில யாருக்கும் உழைப்பில்ல உத்தியோகமில்லை ஆனாலும் நாங்க உயிர் வாழ்றம் இது கடவுள்ற கருணையில்லை....? புதுமையில்லையா...?

நான் கோயிலுக்குப் போறது 'கடவுளே எனக்கு அதத்தா இதத்தா 'எண்டு கேட்கத்தானெண்டு நினைச்சிங்களா? ஒரு நாளும் இல்ல கண்ணேக்கா. எந்த ஒரு விஷயத்த எடுத்தாலும் அதில நான் கடவுளைக் காண்கிறன்! 'நானிருக்கிறன்..... நானிருக்கிறன்' என்று எதிலும் தன்னை எனக்குக் காட்டித் தரும் கருணையே உருவான கடவுளை விழுந்து வணங்கி நன்றி சொல்லத்தான் நான் கோயிலுக்குப் போறன் கண்ணேக்கா.......'

சொல்லிக்கொண்டிருக்கும் போது, கண்ணேக்காவின் கண்கள் கலங்கியதை நான் கண்டேன். என்ன நினைத்துக் கொண்டாவோ. 'நடவும் நானும் உம்மோட கோயிலுக்கு வாறன் 'ரெண்டு பேரும் கதச்சுக் கதச்சுப் போவம்..' என்று சொல்ல. இருவரும் கோயிலை நோக்கி போகிறோம்.

*முற்றும்.*

## அக்பரும் யாசகனும்





*அக்பர் சக்கரவத்தி ஆட்சி செய்த காலத்தில் டில்லிக்கு அருகில் உள்ள ஒரு காட்டில் ஒரு பக்கிரி குடிசை கட்டிக் கொண்டு வாழ்ந்தான். அந்தப்பக்கிரியைக் காண பலர் வந்து கொண்டிருந்தனர். அவர்களை உபசரிக்க பணம் இல்லையே என்று அக்பரிடம் உதவி பெறச் சென்றான் அவன். இவன் போன சமயத்தில் அக்பர் ஆண்டவனைத் தொழுது கொண்டிருந்தார். பக்கிரியும் பக்கத்திலமர்ந்து தொழுதான். 'ஆண்டவனே' எனக்கு மேலும் செல்வம், செல்வாக்கு, அரசு ஆகியவற்றைக் கொடுத்தருள வேணும் என்று அக்பர் பிரார்த்தித்துக் கொண்டது பக்கிரியின் காதில் விழுந்தது. உடனே பக்கிரி அந்த இடத்தை விட்டு நழுவுவதைக் கண்ட அக்ப்பர் 'என்னிடம் வந்த விடயத்தைச் சொல்லாமல் திரும்பிப் போவதேன்?' என்று கேட்டார். அதற்கு பக்கிரி என்னிடம் உபதேசம் பெறுவதற்கு வருகிறவர்களை உபசரிக்கப் பொருளில்லையே என்று நான் உங்களிடம் வந்தேன் நீங்களோ 'அது வேணும் இது வேணும் என்று யாசிக்கிறீர்கள். ஒரு யாசகனிடம் மற்றொரு யாசகன் ஏன் யாசிக்க வேண்டும் என்று பதில் சொன்னான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிலுவையின் பாதை

தவக்காலம் யேசுவின் சிலுவையின் பாடுகளைத் தியானித்து எம்மையே நாம் சீர்துக்கிப் பார்த்து தேவனோடு நெருங்கிய உறவை ஏற்படுத்தும் ஒரு காலமாக நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒரு மீட்பரை அனுப்புவேன் என்ற தேவவாக்குறுதி நிறைவேறும்படி தேவகுமாரனாகிய கிறிஸ்து இவ்வுலகில் மனிதனாகப் பிறந்து சிலுவையில் பல பாடுகள் பட்டு மரித்து மூன்றாம் நாள் உயிர்க்க வேண்டியிருந்தது. இயேசுவின் பிறப்பு முதற்கொண்டு இறப்பு வரை நடக்கவிருக்கும் முக்கிய நிகழ்வுகள் முன் கூட்டியே தீர்க்க தரிசிகளால் முன்னுரைக்கப் பட்டிருந்தது. இயேசுவின் சிலுவையின் பாடுகளைக் குறித்து 'ஆண்டவன் மீது நம்பிக்கை வைத்தானே அவர் மீட்கட்டும். அவருக்கு இவன் மீது பிரியமிருந்தால் இவனை விடுவிக்கட்டும் (சங்21-8) என்றார்கள். என் கைகளையும் கால்களையும் துளைத்தார்கள். என் ஆடைகளைத் தங்களுக்குள் பகிர்ந்து கொண்டார்கள். என் உடை மீது சீட்டுப் போட்டார்கள். (சங் 21 15-18) அவர் கொடுமையாய் நடத்தப்பட்டார். தாழ்மையாய் இதைத் தாங்கிக் கொண்டார். கொல்வதற்காக இழுத்துச் செல்லப்படும் ஆட்டுக் குட்டி போலும் மயிர்க்கத் தரிக்கிறவன் முன்னிலையில் கத்தாத செம்மறி ஆடு போலும் அவர் வாய்திறக்கவில்லை (இசை 53-7). இவ்வாறாக யேசுவின் பாடுகளைக்குறித்துக் கூறப்பட்ட தீர்க்க தரிசனங்கள் அனைத்தும் அப்படியே நிறை வேறியது.

பழைய ஏற்பாட்டுக் காலத்தில் பாவ நிவாரணப்பலியாகக் காளை அல்லது வெள்ளாட்டுக் கடாவின் இரத்தம் சிந்தப்பட வேண்டியிருந்தது. ஆனால் புதிய உடன்படிக்கையின் காலத்திலோ இயேசுவின் இரத்தம் மனுக்குலம் முழுவதையுமே பாவத்திலிருந்து மீட்கும் பொருட்டாக மாசற்ற இரத்தமாக சிந்தப்பட்டது. இதற்கு முன்னே (பழைய உடன் படிக்கைக் காலத்தில்) பரிசுத்தரான தேவன் முன்னே பலியான மனிதன் நிலைநிற்கக் கூடாததாயிருந்தது. பாவம் செய்ததற்கு தேவன் கொடுத்த நியாயத்தீர்ப்பும் கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல் என்பதாகவே அமைந்தது. ஆனால் இயேசு எமக்கு வரவேண்டிய தண்டனையை தாம் ஏற்று தனது விலையேறப் பெற்ற இரத்தத்தைச் சிந்தியதன் மூலம் பரிசுத்த தேவனுடன் பலியான மனிதனும் உறவு கொண்டாட ஓர் இணைப்புப் பாலமானார். (ரோ 5-9). நாம் பாவங்களை அப்புறப் படுத்தி இறைவனுக்கு ஏற்புடையவர்களாய் வாழ கழுமரத்தின் மீது தம் உடலில் நம் பாவங்களை அவரே சுமந்தார். அவருடைய காயங்களால் நீங்கள் குணமானீர்கள் (1பேருது 2-24) என்ற வாக்குப்படி பாவமற்ற இயேசுவின் இரத்தம் பாவிகளாகிய நம்மை பாவத்திலிருந்து நிரந்தரமாக விடுவித்து கழுவி சுத்திகரிப்பதற்காகச் சிந்தப்பட்டது. தேவ நியதியும் தேவ அன்பும் ஒரே இடத்தில் வெளிப்படும் இடமாக இயேசுவின் சிலுவை அமைகிறது. சிலுவையில் இயேசு அனுபவித்த



வேதனைகளை பரிசுத்த வேதாகமம் பின்வருமாறு கூறுகிறது. ஏறக் குறைய மூன்றாம் மணி வேளையில் இயேசு ஏலி, ஏலி லாமா சபத்தானி என்று உரக்கக் கூவினார். 'இதற்கு என் தேவனே என் தேவனே ஏன் என்னைக் கைவிட்டீர் என்பது பொருள்'. (மத் 27.46மாற் 15.34) துரோகியான யூதாஸ் காட்டிக் கொடுக்கும் போதும், பிலாத்து நியாயம் விசாரிக்கும் போதும் போர் சேவகர் அடிக்கும் போதும் முகத்தில் காறித்துப்பும் போதும், தான் தொட்டுச் சுகப்படுத்தியவர்களே இவனை சிலுவையில் அறையும் என்று கூறியபோதும், கெத்சமனே தோட்டத்தில் வேதனையோடு கதறியபோதும், மற்றவர்களை இரட்சித்தான் தன்னைத் தான் இரட்சித்துக் கொள்ள திராணியில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று மற்றவர்கள் நிந்தித்த போதும் இயேசு என் தேவனே என் தேவனே ஏன் என்னைக்கைவிட்டீர் என்று கதறுகிறார். இன்னும் எமது மீறுதல் களினிமித்தம். அக்கிரமங்களினிமித்தமும் தேவன் இவ்வாறே கதறுகிறார். நமது கைகள் செய்த பாவத்தினால் அவரது மென்மையான கரங்கள் ஆணிகளால் துளைக்கப்பட்டன; நமது கால்கள் செய்த பாவத்தினால் அவரது கால்களில் ஆணிகள் அடிக்கப்பட்டன; நமது தலையில் உருவாகி வரும் துர்ச்சிந்தனைகளுக்காக அவரது தலையில் முள்முடி சூட்டப்பட்டு இரத்தம் தாரை தாரையாக வழிந்தது. நாம் எத்தனை பேருடைய மனதைப் புண்படுத்தி னோமோ அதற்காகவே அவரது விலாவில் ஈட்டி பாய்ந்தது. அவரது சரீரம் முழுவதும் காயப்பட்டது. ஒரு குற்றமும் அறியாத அவர் நமது குற்றங் களுக்காகப் பலியானார். அவர் நம்மை இப்பொழு திருக்கிற பிரபஞ்சத்திலிருந்து விடுவிக்கும் படிக்கு நம்முடைய பாவங்களுக்காகப் தம்மைத் தாமே ஒப்புக் கொடுத்தார். ஒருவன் தன் நண்பனுக்காக உயிரைக் கொடுப்பதை விட மேலான அன்பு எவனிடமும் இல்லை. (யோ. 15:15) என்று இயேசு மொழிந்தார். தமது இன்னுயிரையே பலியாக ஈந்த அருமை இரட்சகரின் அன்புக்கு ஈடாக நாம் எதைக் கொடுக்கப் போகின்றோம்? பொல்லாப்பு நிறைந்த உலகில் துன்ப துயரத்துடன் நெருக்கடிகளுக்கு மத்தியில் வாழும் எமக்கும் இயேசுவின் பாடுகள் ஒரு முன்மாதிரிகையாக அமைகிறது. நாமும் எமக்குக் கொடுக்கப்பட்ட சிலுவையை பொறுமையோடே சுமந்து தூய்மையின் வழி நடந்து முடிவில் ஜீவ கிரீடத்தை சுதந்தரித்துக் கொள்வோம்.

- ஏ. ஜே மேர்சி ஜெயா -

இரண்டு வாசல்கள் நமக்கு முன் காணப் படுகின்றன. ஒன்று பரம பதத்திற்கும் ஒன்று நரகத்திற்கும் செலுத்தும்.

ரஸ்வெல்

## என்ன தரப்போகிறார்கள்?!



சில கோயில்களின் முன்னால் ஞாயிறு வாரத்திலே பிச்சைக்காரர் இருப்பதையும் தன் கோயிலின் முன்னால் யாரும் இல்லாதிருப்பதையும் கண்ட குருவானவர் ஒரு பிச்சைக்காரனை அணுகிக் கேட்டார், நாங்கள் எல்லாம் இங்கு ஞாயிறு வாரத்தில் கூடுகிறோம் ஏன் என் கோயிலின் முன்னால் பிச்சை ஏடுக்க வருவதில்லை' என்றார் அதற்கு பிச்சைக்காரன் சொன்னான் சுவாமி இங்கு கோயிலுக்கு வருபவர்கள் பத்தில் ஒன்று கோயிலுக்குக் கொடுப்பார்கள், ஆகையால் எங்களுக்கும் ஏதாவது தருவார்கள் ஆனால் உங்க கோயிலுக்கு வருபவர்கள் 'பத்தில் ஒன்று தருபவர்கள் இல்லையே அவர்கள் தாபரிப்புப் பணம் கூடக் கொடுப்பதில்லையே அப்படியிருக்க அவர்கள் எங்களுக்கு என்ன தரப்போகிறார்கள்?

~ தேவப்பிரியன் ~



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கிய மஞ்சரி

**ஆழியோன்**

கொடிய யுத்தம், எம் மண்ணின் அமைதியைக் தொலைத்து விட்டபோதும் இலக்கிய வெளியீடுகள் அவ் வப்போது வெளிவந்து கொண் டிருக்கின்றன என்ற செய்திகள் மெல்லிய தென்றலாய் மனதை வருடுகின்றன.

ஆனால் வெளியிடப்படும் நூல்களின் விபரங்கள், அவை எங்கிருந்து வெளிவருகின்றன என்ற விபரங்கள் போதியளவில் வாசகர்களைச் சென்றடைவதில்லை. சில இலக்கிய ஆக்கங்கள் மட்டும் விளம்பரங்களுடன் வெளியிடப்படுகின்றன; ஆனால் பெரும் பாலான ஆக்கங்கள் மௌன மாகவே பிரசவமாகின்றன. வெளியீட்டு விழா நடைபெறும் தினமன்று, மண்டபத்தின் வெளியே கட்டப்படும் காணப்படும் பதாகை மட்டுமே நூலின் பிரசவம் பற்றி கட்டியம் கூறி நிற்கும். தற்செயலாக பாதாகை கண்ணில் பட்டால் மட்டுமே வெளியீட்டு விழாபற்றி விளங்கும், அதிகரித்து வரும் பெருஞ் செலவு, இலக்கிய ஆக்க விளம்பரங்களுக்கு தடையாக இருக்கின்றது

இவ்வகையில், இலங்கையில் தேசிய நாள்தாழ்கள் ஆற்றும்பணி அண்மைக்காலமாக பாராட்டப்படத்தக்கதாக காணப்படுகின்றது. குறிப் பாக இலங்கையின் தேசிய நாளிதழ் ஒன்றின் வார வெளியீடொன்று இலங்கையில் வெளிவரும் நூல்களின் விபரங்களை விமர்சனத்துடன் வெளியிட்டு வருகின்றது. அத்துடன் அண்மைக காலமாக இந்திய வெளியீடுகள் பற்றிய விபரங் களும் வெளியிடப்பட்டு வருகின்றன. எவ்வாறா யினும் நூல் வெளியீட்டாளர்கள், சம்பந்தப்பட்ட நாளிதழ்களுடன் கொண்டுள்ள தொடர்பாடலின் அளவுதான் இதன் வெற்றியைத் தீர்மானிக்கும்.. இல்லாவிடின் வெளியீடுகள் பற்றி பத்திரிக்கை யாளர்களுக்கு எவ்வாறு தெரியவரும்?

❋ பேராசியர் கார்த்திகேசு சிவத்தம்பி தமிழி யலுக்கு ஆற்றிய பணி கௌரவிக்கப்பட்டுள்ளது. தமிழக அரசு, 2000ம் ஆண்டுக்கான திரு. வி. க. விருதை பேராசியருக்கு வழங்கியுள்ளதால் இதனால் தமிழக அரசு பெருமை பெற்றுள்ளது பேராசியரை வாழ்த்துவதில் 'தொண்டனும்' மகிழ்கின்றது.

❋ வாஷிங்டனில் திருமணம் என்னும் பிரபல்யமான நாவலை நம்மில் பலர் மறந்திருக்க மாட்டார்கள். அதை எழுதியவர் சா. விஸ்வ நாதன் அவர்கள். இவர் 'சாவி' என்றே பலராலும் அறியப்பட்டவர். 'சாவி' யவர்கள் அண்மையில் காலமான செய்தி இலக்கிய ஆர்வலர்கள் அனை வருக்கும் அதிர்ச்சி.

தனது எண்பத்தைந்தாவது பிறந்தத் தினத்தன்று, தனது வாழ்க்கை வரலாற்றை விளக்கும் 'சாவி 85' நூல் வெளியீட்டு விழாவில் உரையாற்றிக் கொண்டிருக்கையில் திடீரென மயங்கி விழுந்து, பின் அமரரானார். அவரின் மறைவால் வருந்தும் குடும்பத் தினரினதும் இலக்கிய ஆர்வலர்களினதும் கவலைகளில் 'தொண்டன்' பங்கு கொள்கின்றது.

**ஒருவன் பிரார்த்தனை செய்வதில் தனக்காக மட்டும் பிரார்த்தனை செய்வது சரியல்ல. இந்த உலக மெல்லாம் வாழும்படி பிரார்த்தனை செய்தல் வேண்டும். அப்படிச் செய்வதால் அதில் ஒருவனுக்கு வேண்டியவை எல்லாம் அடங்குகிறது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தேசப்படத்தினிலே தேடுகிறேன் என் தீவை

மூதூர்- -ஜெயராஜ்-



தேசப்பற்றினிலே தேகமெங்கும் கொதித்து எழ
தேசப்படத்தினிலே தேடுகிறேன் என்தீவை
சித்தப் பிரமை கொண்ட சிறுநரிகள் மத்தியிலே
சிக்கித் தவித்த எந்தன் அன்னை தீவைக் காணவில்லை

இந்துமா சமுத்திரத்தில் இலங்குகின்ற முத்தென்றார்
எங்கெல்லாம் தேடுவது அம்முத்தை யாரெடுத்தார்.
சொந்தமா மைந்தரெல்லாம் சுரண்டியத்தைச் சூறையாடி
இந்துமா சமுத்திரத்தைத் தாண்டி எங்கோ விற்றுவிட்டார்

சிங்களமும் செந்தமிழும் சேர்ந்து விளையாடுதென்று
சந்தக் கவி யெழுதிப் பாட இனி யார் வருவார் இல்லை
துப்பாக்கி ரவைதுளைத்த ரணங்களினாலிப் பூமி
துடி துடித்து மாண்டகதை தனையெழுத யார் முனைவார்

மலையகத்துத் தேயிலையை வடபுலத்து மாம்பழத்தை
தலை நகரின் கலைவளத்தை தாங்கிநின்ற தளிர்க்கொடியே!
கொலைக் கரத்தில் சிக்கியுடல் கொப்பளிக்கு முன்னருன்னை
அலைக்கரத்தில் அர்ப்பணித்து ஆழ்கடலில் மூழ்கிடம்மா

முகவரியைத் தொலைத்து விட்ட பூமியிதைக் கண்டுவர
புறப்பட்டுச் செல்கின்றேன் முடிந்தவரை திரும்பமாட்டேன்
தகனத்துக்குட்பட்டு என்னுடலம் ஓய்ந்தாலும்
தன் சாம்பர் தனைக் கொண்டுன் முகவரியைத் தானெழுதும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாணவர் பக்கம்

க. பொ. த. (சாதாரணம்)
கத்தோலிக்கம்
4ம் பாடம்

## நல்லது கெட்டதையறிதல்

'நேர்மையாளரே இல்லை. ஒருவர் கூட இல்லை. மதிநுட்பம் உள்ளவர் ஒருவருமில்லை'

உரோ. 3. 10-11.

- மனிதன் பண்பாடுகள் மூலம் முழுமையான வாழ்வை நோக்கிச் செல்கிறான்.
- ஆதியிலிருந்து இன்றுவரையிலான மனித வளர்ச்சியை நாம் காணமுடிகிறது.
- மத்திய கிழக்கு - தூரக்கிழக்கு என்றும் வடக்கு - தெற்கு என்றும் குறிப்பிடப்படும் பலவித கலாசாரங்களை நாம் காண்கிறோம்.
- இவை அழிக்கப்படுகையில் அந்த முழுச் சமுதாயமுமே அழிவுறுகிறது.
- இலங்கையில் முன்னர் நிலவிவந்த சகல நற்பண்புகளும் மறைந்து கொண்டு வருகின்றன. இது நன்மை பயக்காது.
- இலங்கையர் பண்பாட்டில் தலை சிறந்தவர்களென்பதை நாம் புரிந்து கொண்டு செயற்படல் வேண்டும்.

### சமூகவாழ்வின் ஒருமைப்பாடு

- ஒரு சமுதாயத்திற்கு நற்பண்புகளவசியம்.
- பிற மதத்தவரிடம் காணப்படும் பழக்க வழக்கங்களை நாமறிவதுடன், அவற்றை மதிக்கவும் வேண்டும்.
- பௌத்த சமயத்துக்குரிய பஞ்சசீலம், சைவ சமயத்தினர் மதிக்கும் பகவத்கீதை இவை பற்றிய அறிவினை நாம் கொண்டிருக்க வேண்டும்.
- இஸ்லாமியர் கொண்டாடும் றம்ஸான், ஹஜ்ஜு ஆகிய விழாக்களையும் நாமறிந்திருக்க வேண்டும்.
- எமக்கேயுரிய பத்துக்கற்பனைகளைப் பின்பற்றுவது எமது கடமையாகும்.
- கிறிஸ்து நற்பண்புகளை மதித்தார். எனவே, புதிய நற்பண்புகளை அறிமுகஞ் செய்தார். நமக்கெதிரான சம்பவங்கள் நடக்கையில் நாம் கிறிஸ்தவராக, கிறிஸ்து கூறியுள்ள பாதையில் நடக்கவேண்டும்.

## 5ம் பாடம்

### மேலானதொருவாழ்வை நோக்கிச் செல்வோம்

"ஆண்டவர் ஆபிராமிடம் "நீ உறுதியாக தெரிந்து கொள்ளவேண்டியது உன்வழி மரபினர் வேறொரு நாட்டிற்குப் பிழைக்கச் செல்வர்---" அன்று அவர் ஆபிராமுடன் உடன்பாடு செய்து கொண்டார்."

தொடக்கநூல் 15: 9-18



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பழங்கால உடன்படிக்கையில் மிருகங்களை இரு கூறாக்கி முகத்துக்கு முகம் இருக்கும் படியாகவைத்து, அதன்நடுவே நடந்து சென்று இந்த உடன்படிக்கைக்கு விசுவாச முடையவராய் இருப்போமென்று வெளிப் படுத்துவர்.

- இத்தகைய வழக்கங்கள் நல்லவையாகவும். கெட்டவைகளாகவும் காணப்படும் பல சமுதா யங்களை நாமின்று உலகில் காணலாம்.

- சீர்கேடான ஒழுக்கங்களைப் பின்பற்றிய மக்களை இறைவன் அழித்தார். இவை பற்றிய சம்பவங்களை திருவிவிலியம் எமக்கு அறியத்தருகிறது

- இறைவன் மனிதனை மனிதனாக வாழ அழைத்தார். இதற்கென வழிநடத்தும் தலைவர்களையேற்படுத்தினார். ஆபிராம். யோசேப்பு. மோசே ஆகியோர் இத்தகை யோராவர்.

- பத்துக்கற்பனைகளை மனித வாழ்வுக்கென இறைவன் தந்தார்.

- பத்துக்கற்பனைகளையொத்த எட்டுப் பாக்கி யங்களை மலைப்பொழிவில் இயேசு தரு கிறார்.

## 6ம் பாடம்

### விலைமதிக்க முடியாத மனிதத்துவம்

"இந்த உலகத்தின் போக்கின்படி ஒழுகா தீர்கள், மாறாக உங்கள் உள்ளம் புதுப் பிக்கப் பெற்று மாற்றம் அடைவதாக. அப்போது கடவுளின் திருவுளம் எது எனத் தேர்ந்து தெளிவீர்கள். எது நல்லது. எது உகந்தது எது நிறைவானது என்பதும் உங்களுக்குத் தெளிவாகத் தெரியும்"

உரோமர் 12:2

- மனிதத்துவம் என்பது பெறுமதி மிக்கது. அதனை அனைவரும் மதிக்கவேண்டும்.

- மனிதத்துவத்துக்கு எதிரானவைகளாக சிறுவர் துர்ப்பிரயோகம். பாலியல் குற்றச் செயல்கள், குழந்தை வியாபாரம், போதைப் பொருள், தன்னினச் சேர்க்கை, வேலைக் காரச் சிறுவரைத்துன்புறுத்துதல், பழிவாங்கு தல், கற்பழித்தல், கொள்ளையடித்தல், அநியாயஞ்செய்தல், கொலை செய்தல், பொதுச்சொத்துக்களை அழித்தல், பொய், அநீதி, நேர்மையீனம் போன்றன காணப் படுகின்றன.

- இலங்கைமக்கள் சிறந்த ஒழுக்க விழுமி யங்களைக் கொண்டவர்களாக இருந்தனரென அறியமுடிகிறது.

- இலங்கையின் கலை, கலாசாரப் பழக்க வழக்கங்கள், வழிபாட்டு முறைகள், ஒழுக்க விழுமியங்கள் ஆகியவை வெளி நாட்டு ஆதிக்கத்தால் கைவிடப்பட்டன.

- இந்த அழிவுறும் சமுதாய விழுமியங்களை நாம் மீண்டும் கட்டியெழுப்ப வேண்டியது நம் கடனாகும்.

நாம் சமுதாயத்தில் ஓர் அங்கத்தவர். நாம் வாழும் போது சிறந்த விழுமியங்களைக் கொண்டு வாழவேண்டும். இவை இன்று அருகிப் போவதை நாமுணர்ந்து. அவற்றை மீண்டும் எம்மில் உயிர் பெற்றெழச் செய்ய வேண்டும். இதையே இறைவன் விரும் புகிறார்.

**என் முன்னோரைக் காட்டிலும் என்னால் அதிக தொலைவு காண முடிந்தமைக்குக் காரணம் அவர்களின் தோள்களின் மீது நான் நின்று பார்த்ததேயாகும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்தவ இலக்கியப் பார்வையில் வ.அ.இ.



## சில அறிமுகக் குறிப்புகள்.

ஈழத்தின் முது பெரும் எழுத்தாளர்களில் ஒருவரும் ஈழத்து இலக்கியப் பரப்பில் பல தளங்களிலும் கால் பதித்து முத்திரை பொறித்தவருமான தமிழ் ஒளி வ.அ. இராசாரத்தினம் அவர்கள் அண்மையில் அமரரானார். மூதூர் மண்ணின் வாசனையை தமது படைப்புக்கள் மூலம் இலக்கிய உலகில் பரவச்செய்ததோடு கிழக்கு மாகாணத்துக்குப் பெருமை சேர்த்த மூத்த இலக்கிய வாதியுமாவார். அன்னாருக்கு "தொண்டன்" தனது அஞ்சலியைச் செலுத்துவதோடு அவர் நினைவாக இச்சிறப்புக் கட்டுரையை பிரசுரிக்கிறது.

ஆ -ர்.

மனிதர்கள் பிறப்பதும் இறப்பதும் உலக நியதி. பிறந்தவன்....... என்றோ ஒருநாள் இறக்கத்தான் வேண்டும் என்பது உலகப் பொது விதி. ஒருவன் பிறந்தது முதல் இறக்கும் வரை அவன் இந்த உலகில் வாழ்ந்த வாழ்க்கையின் எச்சங்கள் போற்றப்படுவது அவன் வாழும் போது இந்த சமூகத்திற்கு என்ன செய்தான் என்பதிலேயே தங்கியிருக்கிறது. மண்ணையும் மக்களையும் நேசித்த மனிதர்கள் இன்றும் கூட நினைவு கூரப்படுகின்றார்கள். தம் வாழ்நாட்களில் மனிதகுல உயர்வுக்கும் வளர்ச்சிக்கும் உழைத்தவர்களை மனித சமூகம் வெகு சீக்கிரத்தில் மறந்து விடுவதில்லை. எங்கோ ஒரு மூலையில் ஏதோ ஓர் இடத்தில் அவருக்கான நினைவுகள் பதியப்பட்டே இருக்கும்.

அந்த வகையில் அண்மையில் அமரத்துவம் அடைந்த திருகோணமலை மண்ணின் தமிழறிஞர் தமிழ் ஒளி கலாபூஷணம் வ.அ. இராசரத்தினம் அவர்கள் இலக்கிய உலகு மறக்க முடியாத பல தடயங்களை பதித்துச் சென்றுள்ளார்.

தான் வாழ்ந்த மண்ணையும் மக்களையும் நேசிக்க இந்த மகத்தான கலைஞன் தன் எழுத்துக்கள் மூலம் தன் மண்ணுக்குச் சாகாவரம் அளித்துச் சென்றுள்ளான் என்றால் அது மிகையாகாது.

ஒரு படைப்பாளி என்பவன் காலதேச வர்த்த மானங்களைக் கடந்தவன். இனம், மதம், மொழி, பிரதேசம் என்ற குறுகிய பார்வைக்குள் நிற்காமல் அவன் உலகளாவிய பொதுப் பார்வையைக் கொண்டிருப்பவன். அப்படியானால் இந்தத் தலைப்பு ஏன்? இதன் மூலம் எதைச் சொல்லிவிடலாம்? மண்ணையும் நேசித்த ஒரு படைப்பாளியை மதரீதியான பார்வைக்குள் இருந்து எதை சொல்லிவிட முடியும் என்ற கேள்விகள் எம்மத்தியில் எழாமல் இல்லை.

ஒவ்வொரு மனிதனுக்கும் ஒவ்வொரு அடை யாளம் உண்டு. ஏன்? இருத்தலை அவன் காப்பாற்றிக் கொள்ள அந்த அடையாளம் அவனுக்குத் தேவையாக இருக்கின்றது. தான் சார்ந்த சமூகத்திற்கும் மக்களுக்கும் அவன் என்ன செய்தான் என்பது என்றோ ஒருநாள் விசாரிப்புக்குட்ப்படுத்தப்படலாம். இந்த இடத்தில்தான் வ.அ.இ. தன் அடையாளத்தை காப்பாற்ற மட்டுமல்ல தான் சார்ந்த சமூகத்திற்கும் அவர் ஓர் அடையாளத்தை விட்டுச் சென்றுள்ளார்.

ஈழத்து இலக்கிய உலகில் வ.அ.இ. பல தளத்தில் இயங்கியவர். இயங்கியது மட்டுமல்ல தன் இலக்கியத் தளங்களில் தனது தடத்தினையும் ஆழப்பதித்தவர். சிறுகதை உலகில் "தோணிஅறுவடை" என்ற தனது கதைகள் மூலம் புதுமை செய்த இவர் நாவல் வரலாற்றில் இருவழிகளில் தனது திறமையை நிரூபித்துள்ளார். இவரது "துரைக்காரன்" என்ற நாவல் ஒருநாள் நிகழ்வில் முடிவுறும் நாவலாக புதிய உத்தியைப் புலப்படுத்திய அதேவேளை இதுவரை ஈழத்துத்தமிழ்ச் சரித்திர நாவல்களில் அவரது கிரௌஞ்சப பறவைகளே சிறப்பிடம் பெற்று விளங்குகிறது. இதுவரை இதற்கு இணையான சரித்திர நவீனம் எழவில்லை எனலாம்.

கவிதைத் துறையிலும் முத்திரை பதித்த வ.அ.இ. கவிதை மொழிபெயர்ப்பிலும் ஈடுபட்டதோடு ஏராளமான வானொலி மற்றும் மேடை நாடகங்களையும் தந்து, தனது இலக்கிய நினைவுகளை எழுத்துக்களாக பதிவுகளாக்கியதோடு நூற்றுக் கணக்கான கட்டுரை களையும் உரைச்சித்திரங்களையும் எழுதிக் குவித்தார்.

இங்குதான் ஒரு கேள்வி எழுகிறது. வஸ்தியாம்பிள்ளை அந்தோனி இராசரத்தினம் என்ற கத்தோலிக்கக் கிறிஸ்தவ பெயரை தனது முழுப் பெயராகக் கொண்ட வ.அ.இ. தன்னைச் சார்ந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகத்துக்கு என்ன செய்தார்? அந்தக் கேள்வி இங்கு எழுவதற்கு முன்னமே வ.அ.இ. விடையோடு நிற்கிறார்.

பொதுவாகவே கிறிஸ்தவ இலக்கிய முயற்சிகள் ஈழத்திலும் சரி இந்தியாவிலும் சரி வெகு குறைவாகவே இருக்கின்றது. பேரளவில் கிறிஸ்தவ பெயர்களையும், சிலுவைக் குறியீடுகளையும் கொண்டு எழுதப்பட்ட படைப்பிலக்கியங்களை விட முற்று முழுதாக கிறிஸ்தவ சமயம் சார்ந்த சமூகம் சார்ந்த, முழுமையான படைப்புக்கள் இதுவரை வெளிவர வில்லை என்றே நினைக்கின்றேன். அந்த வகையில் தமிழகத்தைச் சேர்ந்த பி.பி.சேவியரின் "மலரோ? மணமோ" என்ற நாவல் கத்தோலிக்க பின்புலத்தில் இயங்கிய ஒரு சிறந்த நாவலாக இருக்க, வ.அ.இ. தனது "தேய் பிறை" என்ற குறுநாவல் மூலம் மூதூரில் மிகச் சிறுபான்மையினராக அதே வேளை ஆழமாக வேர் பரப்பி நிற்கும் கத்தோலிக்க மக்களின் வாழ்க்கையைச் சித்தரிக்கிறார்.

350 ஆண்டுகளுக்கு முன்னர் தென்பாண்டி நாட்டின் கடலோரக்கிராமங்களிலிருந்து இங்கு வந்து குடியேறியவர்கள் கத்தோலிக்கர்களாக மாறி தமது மதக் கொள்கைகளை இறுகப் பற்றிப் பிடித்து அதற்கு முக்கியம் கொடுத்ததன் காரணமாக, அயற் கிராம மக்களுடன் கூடி உறவுகளை வலுப்படுத்தாமல் தமக்குள்ளேயே உறவுகளை வளர்த்து கத்தோலிக்க சட்ட திட்டங்களுக்கு முரணாக தமது உறவினர்களுக்கிடையே இரத்த சம்பந்தத்தில் திருமணம் முடித்து கஷ்டப்படும் மூதூர் கத்தோலிக்க மக்களின் வாழ்வியலை நினைத்து துயரப்படும் ஒருவராக இக் குறுநாவலை அவர் படைத்துள்ளார்.

அதுமட்டுமன்றி வ.அ.இ. அவர்களின் ஐந்தாவது நாவலான "மண்ணிற் சமைந்த மனிதர்கள்" சமூக நாவல் தளத்தில் நின்றாலும் அதுவும் ஒரு குறிப்பிட்ட கால கட்டத்தின் சரித்திர நாவலாக அதாவது 1930 காலப்பகுதியின் சரித்திரத்தை படம் பிடிக்கிறது.

ஆசீர்வாதம் என்ற பாத்திரத்தின் மூலம் தன்னையே கதையின் பிரதான கதாபாத்திரமாகக் கொண்டு மூதூரில் 15 சதவீதமாக வாழுகின்ற கத்தோலிக்கக் கிறிஸ்தவ மக்களின் தனித்துவ பாரம்பரியங்களைப் படம்பிடித்து காட்டியுள்ளார்.

தனது பல சிறுகதைகள் மூலமும கத்தோலிக்கக் கிறிஸ்தவ சமூகத்தின் அதாவது தான் சார்ந்த சமூகத்தின் அடையாளத்தை ஸ்திரப்படுத்திய வ.அ.இ. கத்தோலிக்கர்களின் புனித நாட்களான பாஸ்கா காலத்தில் பல பாஸ்கா நிகழ்வுகளையும், நாடகங்களையும் மேடை ஏற்றக் காரணமாக இருந்துள்ளார். இவரது எழுத்தாக்கத்தால் பல பாஸ்கா நாடகங்கள் அக்காலத்தில் தயாரிக்கப்பட்டுள்ளன.

வாழும் காலத்தில் தான் சார்ந்த சமூகத்தையும் மக்களையும் போசித்த வ.அ.இ. அவர்களின் எழுத்துக்கள் முழுமையாக ஆய்வு செய்யப்பட வேண்டும். அப்போது தான் அவரது பன்முக ஆளுமையின் அடையாளத்தை கண்டு உணர முடியும்.

கடைசியாக தான் சார்ந்த சமூகத்திற்கு எழுத்தில் மட்டும் அல்ல தனது மகன் ஒருவரை கத்தோலிக்கக் குருவாகத் தந்ததன் மூலம் நேரடியாகவே வ.அ.இ. கிறிஸ்தவ சமூகத்திற்கு அளப்பரிய சேவையை ஆற்றியுள்ளார் என்றால் அது மிகையாகாது.

*** வி. மைக்கல் கொலின்**

## நன்றி நவிலல்

மறைந்த முதுபெரும் எழுத்தாளர் அமரர் வ.அ. இராசரெத்தினம் அவர்களின் மறைவையொட்டி, நேரடியாகக் கலந்து அனுதாபங்களைப் பகிர்ந்து கொண்டவர்களுக்கும், உடனடியாகவே மரணச் செய்தியை உலகறியச் செய்த உள்ளூர், சர்வதேச ஊடகத்துறையினருக்கும் (பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி சேவைகள்) அனுதாபச் செய்திகளை தொலைபேசிகள், தொலைத்தந்திகள், தொலைநகல்கள், அனுதாப அட்டைகள், பத்திரிகைச் செய்திகள், வானொலி அறிக்கைகள் ஊடாகப் பகிர்ந்து கொண்ட கல்வித்துறையைச் சார்ந்தவர்கள், உற்றார்கள், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எம் நன்றிகள். விசேட முறையில் கலந்துகொண்டு, அனுதாபத்தைப் பகிர்ந்து கொண்ட திருமலை மட்டுநகர் ஆயர் அதி. வண. யோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை, மறைமாவட்டக் குருக்கள், துறவிகள், பல்வேறு பங்கு மக்கள், மறைக்கல்வி நிலையத்தினர், மூதூர் பங்குத்தந்தை எம் நண்பர்கள், வெளிநாடுகளிலிருந்து உடனடியாக அனுதாபத்தைப் பகிர்ந்து கொண்ட உற்றார்கள், உறவினர், இலக்கிய ஆர்வலர்களுக்கும் எம் நன்றிகள். இரங்கல் செய்திகளைப் பரிமாறிக் கொண்டவர்களுக்கும், தங்கள் வரவால் பங்கெடுத்துக் கொண்டவர்களுக்கும், செய்திகளை உடன் உடன் நெறிப்படுத்திய உள்ளூர் பத்திரிகையாளர்களுக்கும் எம் மனமார்ந்த நன்றிகள். இறுதியாக பல்வேறு விதத்திலும் இக்காலத்தில் எமக்கு உதவியாகவும், ஒத்தாசையாகவும் இருந்த அனைவருக்கும் எம் நன்றிகள்.

*அருட்தந்தை ஏ.ஏ. நவரெட்ணம (மகன்)*

*குடும்பத்தார்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக மயப் போக்கும் சிவில் சமூகமும்

**பேராசிரியர் இ. தேவசகாயம்**

உலக மயமாக்கல் என்னும் புதிய பொருளாதாரக் கொள்கை நாட்டின் அரசு அரசுசாரா நிறுவனங்கள். கட்சிகள், நிர்வாகம் அனைத்தையும் உலக அதிகார அமைப்போடு பின்னிப் பிணைத்துள்ளது. இது சமனற்ற பொருளியல் வளர்ச்சியை உருவாக்கி வருவதோடு மக்களுக் கென உருவாக்கப்பட்டிருந்த நிறுவனங்களையும் தேய்வ டையச் செய்துவருகின்றது. இவர்களின் முதன்மை நோக்கம் இலாபம். இதைவிட முக்கிய நோக்கம் "குறிப்பிட்ட வாழ்வு முறையை ஏற்று கேள்வி கேட்க இயலாத இயந்திரம் போன்ற மனிதர்களை உருவாக்குவது. இம் மனிதர்கள் பிறரோடும் இணைந்து வாழ விரும்பார். பிறரோடு இணைந்து வாழ விரும்பாத மனிதன் அரசியல் பற்றிச் சிந்திக்க மாட்டான். அரசியலற்ற நிலை ஆள்வோரைக் கேள்வி கேட்கா நிலைக்கு இட்டுச் செல்லும்" என்பார் அறிஞர் நோம் சாம்ஸ்கி.

இவ்விரைவான மாற்றங்கள். சுரண்டும் அமைப்புக் களுக்கு மாற்று ஒன்று உண்டென்னும் நம்பிக்கையைத் தகர்த்துள்ளன. முதலாளித்துவ அமைப்பிற்கு இதுவரை மாற்றாகச் செயற்பட்டுவந்த சோசலிச அமைப்பு இன்று இல்லை. முதல் உலகம் மூன்றாம் உலகம் என்ற பிரிவுகள் மறுக்கப்படுவதோடு மூன்றாம் உலக நாடுகள் தமக்கென தனித்த கலாசாரம். பொருளாதாரத் திட்டங்கள் அரசியல் நிர்வாகம் உண்டென்றிருந்த நம்பிக்கையும் தகர்க்கப் பட்டுள்ளது. அரசின் மேலாண்மையைச் சந்தை மூலப் பொருளாதாரம் பெற்றுவிட்டதால் அரசின் நம்பகத் தன்மை. அதன் இருப்பிற்கான நியாயம் பறிபோய்விட்டது. இங்கு அரசின் பங்கு என்ன?. இங்கு அரசின் ஆளுகை கேள்விக் குள்ளாக்கப் பட்டிருப்பதால் அதற்குப் பதில் சொல்ல வேண்டிய கட்டாயமும் இல்லாமற் போய்விட்டது.

இன்று சிவில் சமூகமும் அகில உலகச் சந்தை யின் ஒரு பகுதியாக மாற்றப்பட்டுள்ளமையால், சமூகங் களின் தனித்தன்மை மறுக்கப்பட்டு பாரம் பரிய உற்பத்தி முறை. சந்தை. விநியோகம். மதிப்பீடுகள் அனைத்தும் அழிக்கப்பட்டு. உலகச் சந்தையோடு இணைக்கப்பட்டிருப்ப தால் கிராமங்களின் ஆன்மாகூட பறிக்கப்பட்டிருக்கின்றது.

பன்மை மறுக்கப்பட்டு ஒருமை வலியுறுத்தப் பெறுதலால் சமூக அமைப்பில் காலங்காலமாய் திட்ட மிட்டு ஓரந்தள்ளப்பட்டிருந்த மலைநாட்டு மக்கள, தனித்த இயல்பும் கலாசாரமுமுடைய சிறுபான்மை இனங்கள் முற்றிலும் புறக்கணிக்கப்படுகின்றனர். மாற்றுக் கலாச்சாரப் புரட்சி. அடித்தட்டு மக்களின் இயக்கங்கள் வலுவற்ற தாக்கப்படுகின்றன. அரசியல் முக்கியத்துவத்தைப் பொரு ளாதாரம் (சந்தை) பெற்று விட்டமையால் அரசு, தொழில் நுட்பமேலோர், புத்திசீவிகள், மற்றும் பெருமுதலாளிகளின் வசமாகி விட்டது. சிவில் சமூகம் மக்கள் சமூகமாக மாறிடாமல் செய்யப்பட்டிருக்கும் சூழ்ச்சி இது. சனநாயக அரசு வாக்களித்த உறுதி மொழி நிறைவேறா நிலையில், மக்கள் போராடத் தொடங்கியுள்ளனர். உரிமையிழந்த மக்கள் சனநாயக உரிமை கேட்டு ஒரு பக்கம் போராட்டம். மற்றொரு பக்கம் பொருளாதாரச் சீர்குலைவு, விலைவாசி உயர்வு போன்றவைகளை எதிர்த்து எழும் மக்களின் குரல் இன்னுமொரு பக்கம் உலகமயமாதலுக்கான முயற்சி, இவைகள் அரசை நிலை குலையச் செய்துள்ளன. ஏற்கனவே தன் இருப்பிற்கான நியாயத்தை பதில் சொல்லும் பண்பை இழந்துவிட்ட அரசு வெறும் சட்டம், ஒழுங்கை மட்டும் காக்கும் காவலர் பொறுப்பை ஏற்றுக் கொண்டு முதலாளிகளின் நலன் காக்கும் கருவியாகிறது, சிவில் சமூகம் அந்நியப்படுத்தப்படுகிறது. படிப்படியாக நம்பிக்கை இழந்து வலுவிழந்து, அரசோடு கூடிய தொடர்பு அறுக்கப்பட்டு அரசியலகற்றல் என்ற நிலைக்கு இட்டுச் செல்கிறது. அதிருப்தியின் உச்சியில் வன்முறை வழியில் ஒரு கூட்டம் உருவாகின்றது. சிலர் தமது உரிமைகளுக்காக ஆயுதந் தாங்கிய இயக்கமாகின்றனர். முந்தையதைக் கண்டு கொள்ள மறுக்கும் அரசு பிந்தைய இயக்கத்தை 'பயங்கர வாதிகள்' என்ற பெயரைச் சூட்டி வன்முறை கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடக்க முயல்கிறது. அடிப்படை சனநாயக உரிமைகளையும் மறுக்கிறது. பயங்கரவாதத் தடைச்சட்டங்கள் நியாயப் படுத்தப்பட்டு கொடூரமாகப் பிரயோகிக்கப்படுகின்றன. போட்டி, இலாபம், தனிமனித வளர்ச்சி என்ற மதிப்பீடுகளின் அடிப் படையில் உருவாகும் சந்தைப் பொருளாதார அமைப்பில் மக்களின் வறுமை, ஏற்றத்தாழ்வு, வேலையின்மையைப் போக்குவதற்கான மனிதாபிமான கண்ணோட்டமில்லை. இவை மட்டுமின்றி தேசிய இனங்களின் சுயாட்சி, சுயநிர்ணய உரிமைகளும் மறுக்கப்படுகின்றன.

## கலாசார ஏகாதிபத்தியம்

கலாசார ஏகாதிபத்தியம் இரு நோக்கங்களைக் கொண்டது. ஒன்று பொருளாதாரம், மற்றொன்று அரசியல். பொருளாதார நோக்கில் சந்தைகளைப் பெருக்கி. மக்கள் மனோநிலையை ஏகாதிபத்திய ஏற்புக்குத் தகவைப்பது. அரசியல் நிலையில் கலாசார ஏகாதிபத்தியம் மக்களின் பாரம்பரிய கலாச்சாரத்திலிருந்து அவர்களை வேரறுத்து அன்னியப்படுத்தி ஒருவரோடு ஒருவர் கொள்ளும் உறவை முறிப்பது. தொழிலாளர்களைச் சக தொழிலாளர்களிடமிருந்து பிரிப்பது. படிநிலை அமைப்பின் ஓர் அங்கம் என்ற உணர்வை இவர்களிடம் தூண்டி சாதி, இன, மொழி என்ற வேறு பாட்டிற்கு முக்கியத்துவம் கொடுத்து தம் மேலிருப்போருக்கும் இவர்களுக்கும் இடையிலிருக்கும் வர்க்க வேறுபாட்டை மழுங்கடிப்பது. கலாசார ஏகாதிபத்தியத்தால் மிகவும் பாதிக்கப் பெறுபவர்கள் இளைஞர்களே, நுகர்வுக் கலாசாரத்தை வளர்த்து தனிமனித வளர்ச்சி என்ற சிந்தனையை ஊக்குவித்து திசைதிருப்புகிறது. இளைஞர்களிடம் இயற்கையாக இருக்கும் எதிர்ப்புணர்வு அரசியலாக மாறிவிடக்கூடாது என்பதில் இது மிகத்தெளிவாக இருக்கிறது.

> பிரார்த்தனையின் பயனாக உடம்பு பூரிப்படைகின்றது அறிவு தெளிவு பெறுகின்றது. ஒழுக்கத்துணிவு ஏற்படுகிறது. ஆழ்ந்த ஞானமும் உண்டாகின்றது.
>
> அலெக்ஸிஸ் காரெல்

மேலைநாட்டு கலாசார ஆதிக்க உணர்வை உலகமயமாதலோடு இணைத்துப் பார்க்க வேண்டும். சந்தை மூலம் ஆதிக்கத்தை நிலை நிறுத்த விரும்பும் ஏகாதிபத்திய நாடுகள், கலாசார ஊடகங்கள் மூலம் தங்கள் கருத்தியல் மேலாண்மையைப் பரப்பி, மூன்றாம் உலக நாடுகளையும் அவர் தம் தனித்த கலாசாரங்களையும் அழிப்பதோடு சிவில் சமூகத்தையே சின்னா பின்னமாக்குகின்றன.

முதலாளித்துவம், ஏகாதிபத்தியம் தம் பொருளாதார ஆதிக்கத்தை, சுரண்டலை நிலை நிறுத்த எம்மாதிரி வன்முறைகளைக்கையாளுமோ, அவ்வாறே கலாசார ஏகாதிபத்தியமும் கலாசார பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்துவிடுவதைப் பார்க்கிறோம்.

## நுகர்வுக் கலாசாரம்

சந்தையின் மதிப்பீடு, போட்டி இலாபம், தனிமனித வளர்ச்சி, ஆகியவற்றையும், போட்டியிடத் தகுதியுடையோரே வாழவேண்டும் என்ற மதிப்பீட்டையும் முதன்மையானதாகக் கொண்டது. ஏற்றத் தாழ்வுடைய இந்நாட்டில் போட்டியில் பங்குபெறுவோர் யார் ? சமனற்ற மல்யுத்த வீரர்கள் இருவர் போட்டியிடுகையில் நடுவரும் பலமுள்ளவருக்கே துணைபோவது தான் சந்தைப் பொருளாதாரத்தின் விதியெனில் பலமற்றவனின் நிலை என்ன?

வளர்ந்துவரும் நடுத்தர வர்க்கத்தை மனதில் கொண்டு செய்யப்பெறும் வணிக யுக்திகள், இவர்களை வெறும் நுகர்வு ஜந்துக்களாக மாற்றி, சிந்திக்கும் ஆற்றலில்லாத மக்களாக்கி விடுவதோடு, போட்டி, இலாபம் எனும் மதிப்பீடுகளால் குடும்பம், அண்டைச் சமூகம் இவைகளோடு சமூகம் கொள்ளும் பாரம்பரிய உறவுகளையும் துண்டித்து விடுகின்றன. தோழமை துண்டிக் கப்பட்டு இயந்திரக்கதியில் வாழவைக்கின்றன. ஆன்மாவை இழந்த இவ்வுலகில் சந்தை இருக்கிறது. மக்களில்லை, நுகர்வோன் இருக்கிறான், குடிமகன் இல்லை எனும் கூற்று சிவில் சமூகத்தின் சிதைவைத் தெற்றென வெளிப்படுத்துகிறது. திருச்சபை தரும் மதிப்பீடுகளுக்கு முற்றும் மாறான இத்தகைய மதிப்பீடுகள் தங்களைப் பாதித்துள்ளன என்பதைப் பொதுநிலையினர் உணராமல் வாழ்கின்றனர்.

தொடரும்.......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கே நிம்மதி

குறுங்கதை

அது வசதியான பெரிய வீடு, அதில் வசிப்பவர்கள் பணம் படைத்தவர்கள் என்பது பார்த்தவுடனே தெளிவாகிவிடும். ஆம், கணவன் பெரிய அரச உத்தியோகத்தர், மனைவியும் பதவி வகிப்பவள். ஆணும் பெண்ணுமாக இரண்டு பிள்ளைகள். படிக்கிறார்கள். அந்த மாளிகையின் பக்கத்திலே ஒரு சிறு வீடு. ஒரே அறை. முன்னால் திறந்த மண்டபம். அருகே சமையல் செய்ய வசதியாக ஒரு குடில். அந்த வீட்டில் வசிப்பவர்கள் ஏழைகள்தான். கணவன் தச்சுத்தொழிலாளி, வருமானமோ மிகக் குறைவு. பிள்ளைகள் மொத்தம் எட்டு. பத்து வயதிலிருந்து' பால் குடி' வரை குடும்பத்தை நடத்த அவனுடைய வருமானம் போதவில்லை. அது போதாதென்று அவன் 'நீர் வரி செலுத்துபவன்' அதாவது குடிப் பழக்கமும் உண்டு. இந்த நிலையில் மனைவி பக்கத்து பங்களாவில் வேலை செய்து குடும்பத்தை ஓட்ட வேண்டியிருந்தது.

காலையில் அவள் கொடுக்கும் சாயத் தண்ணீரைக் குடித்துவிட்டுப் புறப்பட்டால் மீண்டும் இரவைக்குத்தான் வருவான் அவன். இரவுச் சாப்பாடு மட்டும்தான் அவனுக்கு. மனைவியும் அதிகாலையிலேயே பங்களாவேலைக்குப் போய்விடுவாள். அங்கே காலை வேளையில் பம்பரமாகச் சுழலவேண்டும். காலைச் சாப்பாடு மத்தியானச்சாப்பாடு கட்ட வேண்டும். பிறகு சட்டி பானை கழுவி, கூட்டித் துடைத்து முடிய ஏழரை மணியாகி விடும். அவர்கள் எல்லோரும் காரில் புறப்படுவார்கள். போகுமுன் நேற்றையச் சாப்பாடு மிச்சம் மீதி கழிவுகள் எல்லாவற்றையும் வேலைக்காரிக்குக் கொடுத்துவிட்டு, வீட்டைப் பூட்டிக் கொண்டு புறப்படுவார்கள். அதை எடுத்துக் கொண்டு வரும் இவள். சாப்பாடெல்லாம் பிசைந்து உருண்டையாக எடுத்துப் பிள்ளைகளுக்குக் கொடுப்பாள். போதுமோ போதாதோ அவ்வளவுதான் சாப்பாடு. பள்ளிக்கூடம் போகும் பிள்ளைகள் போக மற்றவர்கள் விளையாடுவார்கள். மிச்சம் மீதி கிடந்தால் மதியம் சமையல் நடக்கும்.

இத்தனை வறுமையிருந்தும் அந்த ஏழையின் வீட்டில் எப்பவும் கலகலப்புத்தான். சாப்பாடு இல்லையென்று பிள்ளைகள் அழுது அடம் பிடிப்பதில்லை. விளையாடித்திரிவார்கள். அது பழகிவிட்டது. பிள்ளைகள் அதிகமானதால் எப்பவும் சிரிப்பும் விளையாட்டும் அடிதடியும் சந்தடியும்தான். கணவன் வரும் போது 'தண்ணி' போட்டுக்கொண்டு வந்தால் பாட்டுக்கச்சேரியும் நடக்கும். ஒரு நாளாவது அந்த வீடு உறங்கிக் கிடந்ததில்லை.

அதேவேளை அந்த மாளிகையில் அமைதி குடி கொண்டிருக்கும். அந்த அமைதி உண்மையான அமைதியில்லை, பிடிப்பற்ற அமைதி கணவனுக்கு உத்தியோகத்தோடு கௌரவம் பதவிகள் ஏராளம். அவைகளுக்காகத் தொழில் முடிந்த பிறகும் உழைக்க வேண்டியிருந்தது, வீடு வந்து சேர எட்டு மணியாகிவிடும். பிறகு களைப்பு, மனைவி மக்களோடு பேச மனமில்லை. அத்தோடு அவர்கள் மீது எதுவித அதிகாரமும் செலுத்த இவரால் முடியாது. இந்த ஆற்றாமைகளினால் வந்தும், அலுமாரியிலுள்ள உயர்ந்த 'சரக்குகளில்' கொஞ்சம் எடுத்துக் கொண்டு சாப்பிட்டால் பிறகு மயக்கந்தான். இது அவருக்கு நிம்மதி. மனைவிக்கு உத்தியோகம் முடிய பொழுது போக்குக் கழகங்களில் உல்லாசமாகப் பொழுது போகும் அதனால்கணவன் மனைவி உறவில் விரிசல், வெளிக்காட்டாத வெறுப்பு, உணர்வுகளின் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாத அங்கலாய்ப்பு. பிள்ளைகளும் அப்படித் தான், பெற்றவர்களோடு அளவாக அதுவும் தேவை ஏற்பட்டால் மட்டுந்தான் பேசுவார்கள். பெற்றவர்களின் பலவீனங்களும் பொறுப்பற்ற தனங்களும் பிள்ளைகளுக்கும் விளங்கும். இதனால் தங்கள் இச்சைப் படி நடக்கும் மீறுதல்கள். தங்கச்சியின் 'போய் பிரண்ட்'க்கு அண்ணன் ஏதோ கதைத்து விட்டானாம் என்று அண்ணனும் தங்கையும் பேசுவதில்லை. இப்படியான மனத்தாக்கங்கள். வீடு வந்தால் அவரவர் வேலையை முடித்தால் படுக்கைதான், இயந்திர வாழ்வு. அவைகளால் ஏற்பட்ட மயான அமைதி அது.

அடிக்கடி அந்தப் பணக்கார அம்மாள் இந்த ஏழை வேலைக்காரியிடம், 'உங்கட வீட்டுல எப்பவும் கூச்சலும் குழப்பமும்தான். ஒரு நேரமாவது அமைதியா இருக்கத் தெரியாதா... ச்சே... எப்பிடித்தான் நிம்மதியாகச் சீவிக்கிறீங்களோ தெரியாது....' என்று அலுத்துக் கொள்வாள். அவள் குறிப்பிடும் நிம்மதி எது என்று உங்களுக்குப் புரிகிறதா?

~ செல்லத்துரை ஜெயராஜா ~



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணிழந்த பின்னே...



பாவத்தின் கருவறைக்கு
கல்லறைகள் செய்தவரை
கள்வனைப்போல் கொன்றபின்னே
கதறியழுதென்ன பயன்

பார்முட்டி விண்தொட்டு
பாலமிட வந்தவரை
பாரிலிழி மைந்தனென
பரிகசிக்கச் செய்ததுநாம்

கெட்ட மைந்தன் தனைவிடவும்
மட்டமானதோர் சிந்தனையாற்
பட்டதீயில் உழலவைத்த
துட்டபாவி மனிதர்கள்நாம்.

சட்டதிட்ட மென்று சொல்லி
வட்டநிலாவடிவவரை
பட்டப்பகல் வேளையிலே
கட்டிக்கொல்லச் சென்றதுநாம்.

ஏழைகளில் அயலவரில்
அவரைத்தினம் கொல்லுகிறோம்
பார்தளைக்க செய்பவரை
பாவிக்கொப்பாய் திட்டுகிறோம்.

சரியினியேனும் சம்மதஞ்சொல்
சரிவதென்று தேவன்திசை
பரிபாதக் கீழ்ப்புழுவாய்
இறைபாதம் அழுதுவிழு.

முத்தூர் - ஏ. அமல்ராஜ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றாம் நூற்றாண்டின் தொடக்கத்திலே உரோம சாம்ராஜ்ஜியத்தை டயோகிளிஷியன் என்னும் சக்கரவர்த்தி ஆண்டு வந்தான்.

இவன் கிறிஸ்தவத்தையும் கிறிஸ்தவர்களையும் இப்பூவுலகில் இல்லாமல் ஆக்குவேன் என்று வைராக்கியமாகச் செயல்பட்டவன். கிறிஸ்தவத்தைப் பின்பற்றுவதை தனது அதிகாரத்தினால் தடைசெய்தான். தடையை மீறி பின்பற்றியவர்களை மிகக் கொடூரமான தண்டனைக்கு உள்ளாக்கினான். தனது ஆளுகைக்கு உட்பட்ட எல்லையெங்கும் வேதாகம உயிர்க்கொலை வேட்டை நடாத்தினான் யார்யாரிடமெல்லாம் எங்கெங்கெல்லாம் வேதாகமம் இருக்கிறதோ அவற்றை எல்லாம் தேடிப்பிடித்து மொத்தமாகச் சுட்டெரித்து மகிழ்ச்சி கொண்டாடினான். அந்தச் சாம்பல் மேட்டின் மீது கம்பம் நடப்பட்டு 'கிறிஸ்தவர்களுடைய பெயரே இப்பூவுலகில் இருந்து துடைத்து எறியப்பட்டது' என்ற அறிவிப்புப் பலகையையும் தொங்கவிட்டான்.

அக்கால கட்டத்தின் மத்தியிலேதான் 'மௌரிட்டானியா' என்ற நகரின் சபையொன்றிலே தீமோத்தேயு சபை ஊழியக்காரனாக (Deacon) தன்னுடைய நற்செய்திப்பணியைத் செய்து கொண்டிருந்தான். சட்டங்களும், கொடிய தண்டனைகளும் அவனுடைய ஊழியத்தின் உற்சாகத்தை தளரவைக்கவில்லை.

எப்பொழுதும் போல யேசுக்கிறிஸ்துவைப் பின்பற்றும் விசுவாசத்தினால் மட்டுமே மனுக் குலத்திற்கு மீட்பு உண்டு என்று கிறிஸ்தவத்தின் உயிர்த் தத்துவத்தை தைரியமாக அறிவித்து வந்தான். இதனால் அவன் கைது செய்யப்பட்டு அரியானஸ் என்ற ஆளுநரிடம் குற்றச்சாட்டுகளுடன் கொண்டு நிறுத்தப் பட்டான். கைது செய்யப்பட்ட நேரத்தில் தன் கையிலிருந்த வேதாகமத்தை விடாமல் பற்றிக் கொண்டான். ரோமானியச் சேவகர்களால் அதைப் பிடுங்க முடியவில்லை. கடைசியில் தீர்ப்புக்கு அதுவே ஆதாரமாக இருக்கட்டும் என்று கருதி அப்படியே ஆளுநரிடம் கொண்டு நிறுத்தி இருந்தனர்.

# சிலுவை மரணத்தை ஏற்ற

அ. 'ஸ்ரெல்லா பாரதி'



# திமோத்தேயு - மௌரா

தன் முன்பாகவே வேதாகமத்துடன் வந்து நிற்கின்றானே என்று ஆளுநருக்குக் கோபம் பொங்கியெழுந்தது. இப்பொழுதாகிலும் உன்னிடம் இருக்கும் வேதாகமத்தை சுட்டெரிப்பதற்குக் கொடுத்துவிடு இது ரோம இராச்சியத்தின் கட்டளை என்றார் ஆளுநர்.

தீமோத்தேயு வேதாகமத்தைக் கொடுக்க மறுத்தது மாத்திரமல்ல 'எனக்குப் பிள்ளைகள் இருக்குமானால் எந்தத்தயக்கமுமின்றி அவர்களைச் சுட்டெரிக்க ஒப்புவிப்பேனே தவிர தேவனுடைய வார்த்தையை சுட்டெரிக்க ஒப்புவிக்கமாட்டேன்' என்று துணிந்து பதிலளித்தான்.

தன்னையே எதிர்த்து நிற்கிறானே என்று ஆத்திரமடைந்த ஆளுநர் பழுக்கக் காய்ச்சிய இரும்புக் கம்பிகளைக் கொண்டுவந்து அவனது இரண்டு கண்களிலும் பாய்ச்ச உத்தரவிட்டார். 'இனி இந்த வேதாகமத்தை வாசிக்க முடியாது. அது உன் கையில் இருந்தாலும் அது உனக்கே பயனற்றது' என்றார். தண்டனையும் நிறைவேற்றப்பட்டது. தீமோத்தேயு இரண்டு கண்களையும் இழந்தான். ஆனால் இயேசுவின மீது கொண்டிருந்த அன்பையும் விசுவாசத்தையும் இழந்து விடவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனது நிலையில் உறுதியாக நின்றான். மன்னிப்புக் கேட்கவோ, இயேசுவை மறுதலிக்கவோ அவனது சிந்தனையிலும் தோன்றவில்லை.

மூன்று வாரங்களுக்கு முன்புதான்' மௌரா' என்பவள் திமோத்தேயுக்கு மனைவியாக நிச்சயிக்கப் பட்டு இருந்தாள் ஆனால் இன்னும் திருமண மாகவில்லை. இயேசுக்கிறிஸ்துவை மறுதலிக்க வைக்க வேண்டும் என்ற வைராக்கியம் கொண்டிருந்த போர்ச் சேவகர்கள் ஆளுநரின் அனுமதியுடன் மௌராவைக் கொண்டு வந்து ஆளுநர் முன்பாக நிறுத்தினார்கள்.

மௌரா கண்ட காட்சி அவளையே நிலை குலைய வைத்தது....

தீமோத்தேயு கண்கள் இழந்த நிலையில் வாயில் துணிவைத்து அடைக்கப்பட்டு கழுத்தில் கட்டப்பட்ட பாரத்தோடு தலைகீழாகக் கட்டித் தொங்கவிடப்பட்டிருந்தான். இக்காட்சியைக் கண்டதும் அவளது இதயமே வெடித்துச் சிதறுவது போல இருந்தது. அவனது வாயில் இருந்த சீலைத்துணி எடுக்கப்பட்டு மௌராவை கதைக்க அனுமதித்தனர். அச்சூழ்நிலையை அவனால் தாங்கிக்கொள்ள முடியாமல் வேதனையால் கதறினான்.

இத்நிலையில் மௌரா தீமோத்தேயுவிடம் நீங்கள் இயேசுவை மறுதலித்து இக்கொடிய தண்டனையில் இருந்து தப்பிக்கொள்ள வழியிருக்கும் போது ஏன் அதைச் செய்யக் கூடாது?. அல்லது என்னிமித்தமாகிலும் நீங்கள் மறுதலித்து தப்பித்துக் கொள்ளுங்கள். உங்கள் வைராக்கியத்தை மாற்றிக் கொள்ளுங்கள் நான் உங்கள் மனைவி என்று மௌரா கெஞ்சினாள்.

மௌரா! நீ கிறிஸ்தவராக இருந்தும் என் மீது அன்பு வைத்திருக்கிற காரணத்தால் இப்படிப் பேசுகிறாய். இயேசுவில் நான் கொண்டிருக்கும் விசுவாசத்தையும். அன்பையும் எந்தச் சக்தியாலும் மாற்றமுடியாது. நான் கொண்டிருக்கும் விசுவாசத் திற்காகச் சாகவும் நான் அஞ்சமாட்டேன். என்று உறுதியாகப் பதில் அளித்தான். அவனது பதில் மௌராவின் இதயத்தை அசைத்தது. அவள் தன்னை உறுதிப்படுத்திக் கொண்டாள். 'தீமோத்தேயு இயேசுவில் கெண்டுள்ள விசுவாசத்தில் நானும் உறுதியாக இருக்கின்றேன். நானும் அவரோடு சாகவும் ஆயத்தமாக உள்ளேன் என்று ஆளுநருக்கு அறிவித்தாள். தீமோத் தேயுவைப் பணியவைக்க அழைக்கப்பட்ட மௌரா வுக்கும் தீமோத்தேயுவுக்கும் சிலுவை மரணம் எனத் தீர்ப்பளித்தான் ஆளுனன்.

கி.பி. 304ம் ஆண்டு தீமோத்தேயுவும் மௌரராவும் அருகருகே நிறுததப்பட்ட சிலுவையில் அறைந்து கொல்லப்பட்டனர்.

'இரத்தம் சிந்தி மரணத்தைச் சந்திக்கும் தேவ மனிதர்கள் புதைக்கப்படுவதில்லை. அவர்கள் விதைக்கப் படுகின்றனர்'

நாமும் தீமோத்தேயு ~ மௌரா போன்று விசுவாசத்தில் உறுதியாக இருப்போம்.


## கண்ணீரில் கரைந்த ஓராண்டு



அன்னை மடியில்
1976 - 07 - 14

இறைவன் மடியில்
2000 - 03 - 07

**அருட்சகோதரர் அல்போன்ஸ் கமிலஸ்**

துறவியருள் உத்தம துறவியாவாய்
என்று இருந்தோம்
கண்ணீர் கரைபுரள எம்மைவிட்டுப்
போனதேனோ?

உன்பிரிவால் துயருறும்
அன்புப் பெற்றோர்
தம்பி. தங்கை. உற்றார். உறவினர்.

# கிறிஸ்தவ அடிப்படை வாதம்

அருட்தந்தை ஏ.ஏ. நவரெட்ணம்,
(நவாஜீ)

நேற்றுப் பெய்த மழைக்கு இன்று முளைத்த காளான்களைப் போல் கிறிஸ்தவ பெந்தக்கோஸ்தே சபைகள் ஊர், நகர், தெருவெங்கும் இன்று முளைத்து வருகின்றன. மட்டக்களப்பு நகருக்குள் ஒரு தடவை வலம் வந்தால் எத்தனையோ புதிய புதிய பெயருடன் புதிய பல கிறிஸ்தவ சபைகள் தோன்றியிருப்பது நமக்குக் கண்கூடு. அவற்றுள் சில சீயோன் தேவாலயம் (Zion), தேவ அன்பின் சபை (Divine Love of God), கெத்சமணி (Gethsemeni), பெத்தேல் (Betheட), கல்வாரித் திருச்சபை (Causary), நாற்சதுர நற்செய்திச் சபை (Four Square Gospel), இவை மட்டும் தானா! இல்லை. இன்னும் பல இடங்களில் பல சபைகள் தோன்றியுள்ளன. இவையெல்லாம் இன்று சர்வ சாதாரணமாகிவிட்ட நிகழ்வுகள்.

இவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட இச் சபைகள் இன்று கிறிஸ்தவ மக்கள் மத்தியில் பெரும் குழப்பங்களையும் விரிசல்களையும் ஏற்படுத்தி வருகின்றன. அண்மையில் நான் வாசித்த ஒரு கிறிஸ்தவ சபையின் விளம்பரமானது என்னைத் திடுக்கிடச் செய்து விட்டது. அந்த விளம்பரத்தில் மட்டக்களப்பு படுவான்கரைப் பகுதியில் அமைந்துள்ள சில கிராமங்களின் பெயர்கள் பொறிக்கப்பட்ட இவ்விடங்கள் இரட்சிக்கப்படவில்லை. சாத்தானின் பிள்ளைகள் என்றும் அடையாளமிடப்பட்டிருந்தன. இவற்றை மீட்க இவர்கள் கிறிஸ்தவர்களாக மாறவேண்டும். அதாவது தங்களது சபையில் இணைந்து கொண்டால் தான் மீட்பினை பெற்றுக்கொள்ள முடியும் என்னும் பொய்யான செய்தியை தேவனின் செய்தியாகக் கொடுக்கிறார்கள். இன்றும் இன்னொரு வீட்டிற்குச் சென்றபோது அங்குள்ளவர்கள் பேசக் கேட்டேன். கத்தோலிக்க அருங்கொடைக் கூட்டத்தில் கூறப்பட்டதாம் புளியந்தீவுப் பாலத்திற்கு அப்பால் உள்ளவர்கள் இரட்சிக்கப்படவில்லை என்று. இக்கருத்தை நோக்குகின்ற போது கத்தோலிக்க திருச்சபையிலும் இதே அடிப்படைவாதக் கருத்துக்கள் தோன்றி விட்டனவா என்கின்ற அச்சமும், ஐயமும் என் உள்ளத்தில் தோன்றியது.

எனவே இவற்றையெல்லாம் மனத்தில் இருத்திக்கொண்டு அடிப்படை வாதம் (Fundamentalism) பற்றி பேசுவது காலத்தின் கட்டாய தேவையென உணர்ந்தேன். அதன் வெளிப்பாடுதான் இந்தக் கட்டுரை. இங்கு அடிப்படைவாதம் பற்றி நோக்குகின்ற போது இரண்டு வகையான அடிப்படை வாதங்கள் நோக்கப்பட வேண்டும்.

**1. சமய அடிப்படை வாதம்**
(Religious Fundamentalism)

அதாவது எந்தவொரு சமயமும் தனது கொள்கையில், கோட்பாட்டில் சித்தாந்தத்தில் அழுங்கு பிடியாக இருந்து கொண்டு அதன் பாதுகாவலர்கள் என்று தங்களைத் தானே கூறிக் கொண்டு ஏனைய மதங்கைளத் தாக்குவதும், தூற்றுவதும், அழிப்பதுமாகும். இதற்கு அம் மதங்களில் அடிப்படைவாதக் குழுக்கள் துணை போகின்றன. இவர்களை அச்சமயத்தின் தீவிர வாதிகள் எனவும் குறிப்பிடலாம். இஸ்லாமிய சமய அடிப்படைவாதம், பௌத்த சமய அடிப்படைவாதம், என்று உலகிலும் நம் நாட்டிலும் காணப்படுகின்றன. இவர்களின் ஒரு நோக்கம், செயற்பாடு ஏனைய மதங்களை தாக்குவது, அழிப்பது. (இந்து, இஸ்லாம், கிறிஸ்தவ, பௌத்த தீவிர வாதக் குழுக்கள் இந்த சமய அடிப்படை வாதத்திற்கு துணை போகின்றன.)

**2) கிறிஸ்தவ அடிப்படை வாதம்**
(Christian Fundamentalism)

இங்கு அந்த அந்த சபைகளில் உள்ள சில குழுக்கள் தோன்றி தங்களைத் தாங்களே சமயத்தின் பாதுகாவலர்கள் என்று கூறிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு தங்கள் சமய நெறியைப் பின்பற்றும் ஏனையவர்கள் பிழையானவர்கள், தப்பிப்பிழைப் பவர்கள், என்று அவர்களுக்கு எதிராகச் செயற்பட்டு தங்கள் சமயக் கோட்பாட்டிற்குள், கட்டுக் கோப்பிற்குள் வாழ மக்களை அழைப் பவர்கள். தங்கள் நெறியே நேரியது, சரியா னது என்று ஆடுகளையே களவாடும் மக்கள் கூட்டத்தினர் இவர்கள். தங்கள் சமயத்துக் குள்ளேயே பிளவினையும் பிரிவினையையும் உண்டாக்குகின்றனர்.

என்னுடைய இந்தக் கட்டுரையும், இந்த இரண்டாவது குழுவைப் பற்றியதே. இன்று கிறிஸ்தவம் பல்வேறு சபைகளால் துண்டாடப் படுகினறது. பல்வேறு தப்பறை போதனைகளால் அலைக்கழிக்கப்படுகின்றது. எம் மக்கள் தத் தளிக்கின்றனர். எது சரி, எது பிழை என்று தீர்மானிப்பதில் சிக்கல்படுகின்றனர். இதற்கு விடை காண்பதே என் நோக்கம்.

அதாவது

- *கிறிஸ்தவ அடிப்படை வாதம் என்றால் என்ன?*
- *அதன் தோற்றம், வளர்ச்சி என்ன?*
- *அதன் செய்தி என்ன?*
- *அது கத்தோலிக்க திருச்சபைக்கு அளித்துள்ள தாக்கம் என்ன?*
- *கத்தோலிக்க திருச்சபையின் அணுகு முறை இதன் மட்டில் எவ்வாறு இருக்க வேண்டும்?*
- *கத்தோலிக்க அருங்கொடைசபைகளின் நோக்கப் பணி என்ன?*

கிறிஸ்தவ நெறியின் வரலாற்றைப் புரட்டிப் பார்த்தால் அடிப்படைவாதம் எனும் அரக்கனின் செயற்பாட்டிற்கு அது உட்பட்டிருந்தது என்பது வெளிப்படை. யூதரல்லாத புறவினத்தார் திருச்சபையில் இணைந்த போது எதிர்த்தது. திருச்சபைக்கு வெளியே மீட்புக்கிடையாது என பிரகடனம் செய்தது. முகமதியர்களுக்கு எதிராக சிலுவைப் போர்களைத் தொடுத்தது. முரணான விசுவாச உண்மைகளைப் போதித்த வர்களுக்கு எதிராக விசாரணை மன்றங்களை ஏற்படுத்தியது. (Inouisition) இவை எமக்கு அடிப்படைவாதத்திற்குச் சான்றுகளாக உள்ளன. ஆனால் காலப்போக்கில் கத்தோலிக்க திருச் சபையும், சீர்த்திருத்தச் சபைகளும் தங்களுக் குள் ஏற்படுத்திக் கொண்ட மாற்றங்கள், மறுமலர்ச்சி காரணமாக அடிப்படைவாதக் கருத்துக்கள் விலகத் தொடங்கி ஒன்றிப்பு, பல்சமய உரையாடல் போன்றவை செயல் வடிவம் பெறத் தொடங்கின. இத்தகைய முற்போக்கு சிந்தனைக்குள்ளும் இவற்றுக் கெதிராகச் செயற்படுவோர் தோன்றி தாங்கள் விசவாசத்தின் பாதுகாவலர்கள் எனப் பெயர் குத்திக் கொள்கிறார்கள்.

ஆயினும் அடிப்படைவாதக் கொள் கைகளை உலகெல்லாம் பரப்பிடும் நோக் கத்தில் 19ம் நூற்றாண்டில் ஐக்கிய அமெரிக்க நாட்டில் பல சபைகள் தோன்றி செயற்படத் தொடங்கின. அவை இன்று உலகெல்லாம் பரவி வருகின்றன. இவற்றின் நோக்கம் செயற்பாடு எல்லாமே ஒன்றுதான். தங்களது போதனைகள் மட்டுமே உண்மையானவை. பிறசபைகளோ, சமயங்களோ போதிப்பது அனைத்தும் பொய்யானவை. இவர்களின் செயற்பாடானது சமயங்களின் நல்லிணக்கத்தை யும் அவைகளின் ஒற்றுமையையும் விரும்பும் மக்களுக்கு பெரியதொரு சவாலாக உள்ளன.

இதே கிறிஸ்தவ அடிப்படை வாதக் குழுக்கள் இன்று தோன்றினாலும் அவை யாவும் தோற்றம் பெற சில அடிப்படைக் காரணங்கள் வரலாற்றில் காணப்படுகின்றன. 19ம் நூற்றாண் டில் அமெரிக்காவிலுள்ள பல சீர்த்திருத்தச் சபைகளிலிருந்து பிரிந்து சென்ற பழமை வாதிகள் ஒன்று சேர்ந்து அன்று முழுவீச்சுடன் உருப்பெற்று வந்து முற்போக்கு சிந்தனைக்கு எதிராக போர் தொடுத்தனர். அதன் விளை வாகத் தோன்றியதே கிறிஸ்தவ அடிப்படை வாதம் அவற்றிற்கான காரணங்களை நோக்கு கின்ற போது.

(தொடரும்...)

**இந்த யுகத்தின் மனிதன் இயந்திரத் திற்கு எசமானன் அல்லன். இயந்தி ரத்தின் ஒரு பகுதியாக, அதன் ஒரு சக்கரமாகச் சுழன்று கொண்டிருக் கின்றான்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விவிலியம் கற்போம் ~ 06 முடிவுகள்



விடைகள்

1) பதான் அராம் 2) லாபான்
3) அங்கே கிடந்த கல் 4) ஏணி 5) பெத்தேல்

50/= பரிசு பொறுவேர்

1) சா. மேரி குயின்சிலி மொறாயஸ்
அரிப்புத்துறை
முருங்கன்.

2) டெரன்ஸ் டீ சௌசா
508 அம்பாள் வீதி
அன்புவழிபுரம்
திருகோணமலை.

3) கத்தறீன் வெல்த்மன்
4/1. சென் மேரிஸ் வீதி
மட்டக்களப்பு.

4) ருத்ஷானா நூபராஜா
மத்தியாஸ் வீதி
மட்டக்களப்பு.

5) மெருசன் கென்றிக்
மாயழகு வீதி
அக்கரைப்பற்று - 8

## அறிவை வளர்ப்போம் ~ 06 முடிவுகள்



விடைகள்

1) ஷாஜகான் 2) 87 வயது 3) காசியப்பன்
4) H.I.V 5) 1966 6) சிட்னி

50/= பரிசு பொறுவேர்

1) செல்வம் அலக்சி
வீச்சுக்கல்முனை
மட்டக்களப்பு.

2) நொயலின் பாத்லட்,
66/1, செபஸ்தியார் வீதி,
மட்டக்களப்பு.

3) வி. உதயசந்திரிக்கா,
47/1. புதிய வன்னியார் வீதி,
சிங்களவாடி - மட்டக்களப்பு.

4) ஆர். அஞ்சலின் நிஷாந்தி,
C/o திருமதி ஆர். ரவி
கிட்டங்கி வீதி,
மணல் சேனை - கல்முனை.

5) அலிஸ் ஜெயமலர்,
3ம் வட்டாரம்,
நிலாவெளி - திருகோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Registered as a News Paper in Sri Lanka.*

காற்றில் கலந்து வரும்

# கத்தோலிக்க வானொலி நிகழ்ச்சிகள் - தமிழ்

## ஏப்ரல் - 2001

நாள் : 01
நேரம் : மாலை 7.00 மணி
புதிய உலகம்

நாள் : 03
நேரம் : மாலை 7.45 மணி.
சிறுவர் உலகம்
* திருமறை விநாடி வினாப் போட்டி

நாள் : 06
நேரம் : மாலை 5.30 மணி
புதிய உலகம்
தவக்கால வெள்ளி சிறப்பு மலர்

நாள் : 08
நேரம் : பி.ப. 2.00 மணி
புதிய உலகம்
குருத்து ஞாயிறு சிறப்பு மலர்

நாள் : 12
நேரம் : மாலை. 6.15 மணி
புதிய உலகம்
புனித வியாழன் சிறப்பு மலர்

நாள் : 13
நேரம் : காலை 11.00 மணி
புதிய உலகம்
புனித வெள்ளி சிறப்பு மலர்

நாள் : 14
நேரம் : மாலை 5.30 மணி
புதிய உலகம்
புனித சனி சிறப்பு மலர்

நாள் : 15
நேரம் : காலை 10.00 மணி
புதிய உலகம்
உயிர்ப்பு விழா சிறப்பு மலர்

நாள் : 15
நேரம் : மாலை 7.00 மணி
புதிய உலகம்

நாள் : 17
நேரம் : மாலை 7.45 மணி
சிறுவர் உலகம்

நாள் : 29
நேரம் : மாலை 7.00 மணி
புதிய உலகம்

நிகழ்ச்சித் தொகுப்பு :-
மலர்வேந்தன்

தொடர்பு :-
சமூகத் தொடர்பு நிலையம்
அ. பெ. எண் - 44
மட்டக்களப்பு.

St. Ignatius Type Setting - 28, Sinnalebbe Street, Batticaloa.
Printing & Cover Designation - St. Joseph's Catholic Press, Batticaloa.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org